
குருபா

# ஞானசம்பந்த

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] குரோதிஆண்டு ஆவணித்திங்கள் 10—9—6



தருமையாதீனம். ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதே

..மயாதீனக் குருமுதல்வர்



..ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

நனவாதி அத்தத்தில்
நாடுசுகந் தன்னைக்
கனவாதி அந்தத்தில்
கண்டு — நனவாதி
தோற்றிடும்போ தந்தச்
சுகரூபங் கண்டவர்கள்
மாற்றிடுவர் என்றும்
மலம். (21)

ஆசிரியர் :-

வித்துவான்,
..ராமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,
..சொ. சிங்காரவேலன், M. A.,

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

| மலர் 23 | 10–9–64 | இதழ் 10 |
|---|---|---|

## உட்பொருள்

எண் பக்கம்

1 ஆனைமுகன்
அடிபோற்றி ... 555
2 சிந்துபூந்துறையும்
சிவனருள் நெறியும் ... 558
3 வணக்கம் ... 561
4 ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி
அவர்கள் அருளுரை .. 562
5 கும்பாபிஷேக விழா ... 571
6 ஸ்ரீலஸ்ரீ கயிலைக்
குருமணி அவர்களின்
ஆசியுரை ... 579
7 பணிவியல்நன்றியுரை... 585
8 சித்தாந்த வினாவிடை ... 589
9 திருமுகம் படும்பாடு ... 592
10 தொல்காப்பியச்
சொல்லதிகார விளக்கக்
கட்டுரைகள் ... 595
11 சஹஸ்ராகமம் ... 597
12 தோத்திரப் பாமாலை ... 599
13 செய்திகள் ... 601
14 சாரதா நவராத்திரி ... 607
16 எதிர்காலம் ... 611

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] சோபகிருது - ஆவணி - 10—9—64 [ இதழ் 10

திருச்சிற்றம்பலம்

*பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை*
*பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!*
*கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!*
*நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.* (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## ஆனைமுகன் அடி போற்றி!

" பலபல காமத்தர் ஆகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்,
வலமேந்திரண்டு சுடரும், வான்கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்சவருவதும் இல்லை "

என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. விநாயகப் பெருமான் விக்கினங்களைத் தீர்த்தருளும் வித்தகக் கடவுள்; திரு ஆக்கும்; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொற் பெரு வாக்கும் பீடும் பெருக்கும்; உருவாக்கும்" என்று பதினோ

ராம் திருமுறை பாடும். நம் எண்ணங்களைத் தூய்மைப் படுத்தி நம்மை உயர்த்துவதில் கணபதிக்கடவுள் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார். பிள்ளையார்சுழி போடாமல் எதையும் நாம் செய்யமுற்படுவதில்லை, பிள்ளையார் குட்டிக் கொண்டே பெரும்பெரும் புராணங்களும் இலக்கியங்களும் செய்யப்பெற்றன. அப்பெருமான் காத்துவருவதாலேயே எல்லாம் இனிது இயங்கி வருகின்றன. சிவபிரான் புகழ் பாடும் பனுவல்களுக்கும் கூட இந்த மூத்தபிள்ளையார்க்குக் காப்புப் பாடாமல் கவிஞர்கள் இருந்ததில்லை. ஆண்டு தோறும் ஆவணிமாதத்துச் சதுர்த்தியில் கணபதிக் கடவுளைக் கரம் கூப்பிவருவது நம் தெய்வத் தமிழ்நாடு. "ஆனை முகக் கடவுளே! நாட்டில் திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும், பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்கவும், வானுலகும் மண்ணுலகும் வாழவும், மறைவாழவும், அடியவர் இடர் கடியவும, அருள்புரியவேண்டும்" என்று வேண்டிக் கரம்கூப்புகின்றோம.

நமக்குப் பலப்பல நினைவுகள்; விருப்பங்கள், அவற்றில் ஒவ்வொன்றையும் நிறைவேற்றத் துடிக்கும் நம் பரபரப்பு. இந்த நினைவு, விருப்பங்களின் நடுவிலும், பரபரப்பின் இடையிலும் புகுந்து இவற்றைச் சாய்த்து அமைதியை உண்டாக்குகிறாராம் ஆனைமுகக் கடவுள்; அப்பரடிகள் அநுபவமொழி இது :

> *"பலபல காமத்தர் ஆகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே*
> *கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறு"*

ஔவையாரை மனித நிலையிலிருந்து தெய்வநிலைக்கு உயர்த்தியவர் மூத்தபிள்ளையார்; அதனால் விநாயகர் அகவல் ஏற்று இன்றும் விளங்குகின்றார் இவ்வித்தகக் கடவுள். எவ்வளவோ வடமொழி தென்மொழி நூல்களை உலகிற்குக் காத்து வழங்கும் கருணைக் கடல் இக் 'கைம்மாமுகக் கடவுள்' 'ஞானக்கொழுந்து' என்று ஞானியாம் திருமூலர் இப்பிரானைத் தம்முடைய தமிழாகமத்தின் தொடக்கத்தே

தாள் பரவித் தொழுகின்றார். புராண இதிகாசக் காப்பியங்கள் அனைத்திலும் உள்ளும் புறம்புமாய் நின்று ஒளிவிளக்கம் புரிபவர் இப்பெருமான்.

விநாயகர் சதுர்த்தசியில் விரதம் இருந்து அபிடேக ஆராதனைகள் புரிந்து, நியமம் வழுவாது தொழும் அடியார்கள் வேண்டுவதே ஈயும் விழுப்பம் உடையவர் இக்கடவுள். திருநாரையூரில் இருந்து அருள்புரியும் இப்பெருமான் அருளாலேயே பன்னிரண்டு திருமுறைகளையும் உலகு பெற்றது.

சித்தாந்த சாத்திரம் கற்க முற்படும் சைவ அன்பர்கள் அனைவர்க்கும் இப்பெருமான் சிறந்து நின்று சீரருள் வழங்குவர். அதனால் ‘இப்போல்லார் இணைமலர் நல்லார் புனைவர்’ என்று கூறும் மெய்கண்ட சாத்திரம். “சிந்தைத் திருகு ஓட்டும்; அயன் திருமால் செல்வமும் ஒன்றோ என்னத் தேவு செய்யும்” என்று அருணந்தி சிவம் அருளும் திறம் அறியார் யாரே! “நற்குஞ்சரக் கன்று நண்ணிற் கலை ஞானம் கற்கும் சரக்கன்று காண்” என்று உமாபதிசிவமும் இதனை விளக்கியருள்வர். இவ்வாறெல்லாம் சைவப் பெருமக்கள் வாழ்வில் ஒன்றாய் நின்று வழிகாட்டும் வான் பொருளாகிய இப்பெருமானை விநாயகசதுர்த்தியில் வழிபட்டு இன்புறுவதுடன் எந்தச் செயலைத் தொடங்கும்போதும் எப்போதும், எண்ணி நலம் பெறுவோமாக. ‘விநாயகனே வெவ்வினையை வேரறுப்பான்’ ஆதலின் வினைப்பகை தீர்ந்து விழுப்பேறு எய்தும் கடப்பாடுடைய எல்லாவுயிர்க்கும் விநாயக வழிபாடு இன்றியமையாதது

*“அக்கினொடும் என்பணிந்த அழகன் தன்னை*
*அறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன்தன்னை*
*நக்கனை வக்கரையானை நள்ளாற்றானை*
*நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே”*

[ அப்பரடிகள் - 2825 ]

# சிந்துபூந்துறையும் சிவனருள் நெறியும்

'தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருக்கும் தேசிகராயர்' என நான்காவது குருமூர்த்திகளை பண்ணுறின்றமிழாற் பண்டார மும்மணிக் கோவையில் போற்றினர் குமரகுருபர சுவாமிகள். ஆருவது குருமூர்த்திகளாகத் திருத்தருமையாதீன ஞானபீடத்தை அணிசெய்து அருட்செங்கோல் நடாத்திய ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக குருமூர்த்திகள் தம் அரசு வீற்றிருக்கும் திருத்தலங்களுள் ஒன்ருக நெல்லையையும் சேர்த்து அருளரசை விரிவுபடுத்தினர்கள். ஆம்; நெல்லையம்பதியில் வீற்றிருந்து அருள் மணம் பரப்பினர்கள்; தட்சிணப் பகுதியில் யாத்திரை புரிந்தருளி அங்கெல்லாம் தருமையின் பெருமையை, சிவனருள் நெறியைப் பரப்பினர்கள். நெல்லையில், தமிழ் கொழிக்கும் தாமிரபரணி யாற்றின் கரையில், சிந்துபூந்துறையில் பரிபூரணமெய்தினர்கள். தருமையாதீன ஆதி பரமாசாரிய சுவாமிகள் சிவபோகசாரத்தில்,

"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
காஞ்சி கழுக்குன்ற மறைக்காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்"

என்றருளியதற்கிணங்க, முத்தித் தலங்களுள் நடுவணதாக நவிலப்பெற்ற 'நெல்லை' இவர்களது பரிபூரண எல்லையாகும் பாக்கியத்தைப் பெற்றது.

இவர்கள் ஆதி பரமாசாரிய சுவாமிகள் திருப்பெயரைத் தாமும் கொண்டருளியதற்கேற்ப, அவர்கள் காட்டும் அருள் நெறியிலே நின்றவர்கள்; வேள்விமலையிலே சென்று வழிபட்ட காலத்து, வள்ளியம்மை திருவுரு தம் பார்வைக்கு இலக்காகாமல் இருக்க, 'வள்ளித்தாய் இங்கு இல்லையோ' என்று வினவி, வள்ளியம்மை உடன் அனபுக் குழந்தையின் ஆர்வக் காட்சிக்கு இணங்கித் திருமேனி வளைந்து கொடுக்கப்பெற்ற திருவருள் வீறுடையவர்கள்.

திருப்பனந்தாளில் குங்குலியக்கலய நாயனார்க்கு இறைவன் திருமேனி வளைந்தான்; வேள்விமலையில் இஞ்ஞானப் பெரு வேந்தர்க்கு இறைவி (வள்ளிநாய்ச்சியார்) திருமேனி வளைந்தாள் என்றால் இவர்களது அருள் வன்மைக்கு ஒப்பும் உண்டோ? இவர்களிடம் ஞானோபதேசம் பெற்று மைசூரில் சென்று மடாலய மாண்பை, சித்தாந்த சைவச் செந்நெறியை இனிது பரப்பிவந்த சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள் பாடியருளிய 'தேசிக சிகாரத்ன மாலை' இவர்களது ஞான அநுபவச் செல்வத்தை இன்றும் எடுத்துரைக்கும் தோத்திரப் பாமாலையாக உள்ளது. இவர்களது சிவானுபவமும், உபதேசமுமே, கந்தபுராணச் சுருக்கமாக எழுந்தது. இவர்கள், தம் காலத்து ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களை, பதி பசு பாசம் ஆகிய முப்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடச்செய்தும், உலக வாழ்க்கையில் உவர்ப்புக் கொள்ளச்செய்தும், கல்வி கேள்வி யல்லல்களினின்று ஓய்வுபெறச் செய்தும், சிவானந்தப் பெருங்கடலுள் சுத்தாத்துவித சைவசித்தாந்த முத்தி பெறுவித்தும் அருளிப்பாடு செய்திருந்தார்கள் என்பதற்குச் சம்பந்தசரணாலய சுவாமிகளது திருப்பாடலே நமக்குத் தக்க சான்றாக அமைந்துள்ளது. கிளி பூனை முதலிய அஃறிணை உயிர்களுக்கும் ஞானதீட்சை புரிந்து அவற்றை சிவனருள் நெறிப்படுத்தும் சிறப்பு இக் குருமூர்த்திகளுக்கே உரியதாகும்.

இவர்களது பரிபூரணம் நிகழ்ந்த நெல்லைச் சிந்துபூந்துறையில், இவர்களுக்குப் புதிதாக ஓர் ஆலயம் எடுப்பித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்; கயிலை யாத்திரை புரிந்தருளிக் கனகாபிஷேகமும் கொண்டருளிய தருமையாதீனப் பெருங்குரவராக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களுடைய குருபக்தியும், சிவபக்தியும், சங்கம பக்தியும் அளவிட்டுரைக்க வியலாதவை. சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரத்திற் கூறப்பட்ட அணைந்தோர் தன்மைக்குத் தக்க இலக்கியமாக விளங்கி வரும் நம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமாமணியவர்கள் முறுகிய பேரன்பு கொண்டவர்களாய்ச் சிந்துபூந்துறையில் சிவனருள், கூட்டும் குருவருள் நிலையமாக இக் குருமூர்த்த ஆலயம் அமைதல் வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டருளினார்கள், அவர்கள் திருவுள்ளப்படியே, திருக்கோயில் மிகத்திருத்தமாக அமைந்து விட்டது. காசிவிசுவநாதர் திருக்கோயிற் கோபுரத்தையும், தருமையாதீனம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி ஆலய அமைப்பையும் அன்பர்கள் உள்ளங்களில் நினைவூட்டுவதாய் அமைந்த இக்

குருமூர்த்த ஆலயத் திருப்பணி நிறைவுபெற்றது; 21—8—64 வெள்ளிக்கிழமை யன்று மகாகும்பாபிஷேகம் மாண்புற நிகழ்ந்தது.

கும்பாபிஷேகத்தையொட்டி நிகழ்ந்த தோத்திர சாத்திர மாநாட்டில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளிய, 'ஞான, போதம்' (அருளாசிச் செறிவுரை) குருவருளை விளக்கி. சித்தியும், பத்தியும், முத்தியும், உண்மையும் ஆகியவற்றைத் தருபவன் குருநாதன் ஒருவனே என்று நிறுவி. நெல்லைவாழ் சைவப் பெருமக்கள் வாய்ப்பாக அங்குக் குருமூர்த்தம் அமைந்தது நல்ல திருவருட் குறிப்பு ஆகும் என்று இனிது உணர்த்திற்று மாநாட்டிற் பங்குபற்றிய எல்லா அறிஞர்களும் தோத்திரங்களில் காணப்பெறும் பக்தி நெறிப் பாங்கு பற்றியும், சாத்திரங்களிற் காணப்பெறும் முப்பொருள் நெறி முதன்மை பற்றியும் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ப் பேசினார்கள். திரளாகக் கூடியிருந்த நெல்லைவாழ் சைவப் பெருமக்கள் நெல்லையின் சீர்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள்; உரிய நேரங்களில் யாகசாலை பூசைகளிலும், கும்பாபிஷேக தரிசனத்திலும் பங்குபற்றி எல்லா மக்களும் இருமைப் பயன்களும் எய்தினார்கள்; கும்பாபிஷேக மலராக வெளியிடப்பெற்ற 'கந்த புராணச் சுருக்கம்' செவ்வேளருளைச் சிந்தையிற் றேக்கிச் சிறப்படைய அன்பர் அனைவர்க்கும் அரிய கருவியாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

பெரிய அருளாளர்களாக விளங்கிய தருமையாதீன ஞானானுபூதிச் செல்வர்கள் தங்கித் தவம் இயற்றிய சிந்துபூந்துறைத் தருமபுர ஆதீன மடம் இந்நாட்களில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களையும். ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களையும் தன்னிடத்துக்கொண்டு தவச்சாலையாகவே விளங்கியது. ஒருபுறம் ஆகமமும், ஒருபுறம் திருமுறையும் முழங்கியவண்ணமிருந்த இத் தவச்சாலைக்குத் திரளாக வந்து சைவப் பெருமக்கள் குருதரிசனம் செய்து பயன்பெற்றனர். இதுபோன்ற நல்விழாக்கள் அடிக்கடி நிகழுமேல் குருசிஷ்ய பாவங்களும் நன்கு பெருகி, நாட்டில் சைவசமயப் பெருவளர்ச்சிக்குப் பெருந்துணை புரியும் என்பது துறுதி. தருமையருள்பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகமும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகமும் ஆகிய இருபெரு நிறுவனங்களைச் சேர்ந்த அன்பர்கள் பணி பலவும் இந்நாட்களில் பெருகின. இவ்வாறு நெல்லையில் நிகழ்ந்த நிகழ்ச்சி சைவ உலகிற்கே பெருவாய்ப்பு எனலாம்.

# வணக்கம்

ஞானசம்பந்தம், இத்திங்களில் ஞானசம்பந்தமாகவே - ஆறாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய மூர்த்திகள் குருமூர்த்த ஆலய மகாகும்பாபிடேக மலராகவே மலர்வது நேயர்களுக்கு மகிழ்ச்சியைத்தரும். இதில் முதற்கண் விநாயக சதுர்த்தியின் சிறப்பும், குருமூர்த்திகள் சிறப்பும் காணப்பெறுவது பெரிதும் பொருத்தமாகின்றது.

இம்மலருக்கு ஞானமணமாக நின்று மிளிருமாறு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் 'போற்றிப் பஃறொடை' என்னும் சாத்திரச் சிறப்பைத் தங்கள் அருளுரையாக வழங்கியுள்ளார்கள். அவர்களது அருளுரையில் இறைவன் உயிர்களுக்குக் கைம்மாறு கருதாது என்ஞான்றும் உடனாய் நின்று எல்லா நலங்களையும் உதவிவரும் பெருங்கருணையை உயிர்கள் எவ்வாற்றானும் மறவாது நினைந்து உளம் உருகிப் போற்றுதல் வேண்டும் என்பதை மிகவும் உறுதியாக எடுத்து வலியுறுத்தியருளுகின்றார்கள். இஃது உயிர்கட்கு இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்று நலங்களையும் தரும் நன்னெறியாய் அமையும்.

தருமையாதீனத்து ஆறாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது அருளாட்சிக் காலத்தில் தெய்வீக நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தமை, திருவருள் கைவரப்பெற்ற அருளாளராகிய முனிவர் பலர் சைவத்தையும் தமிழையும் வளர்த்தமை முதலிய வரலாறுகள் அக்குருமூர்த்தி ஆலய மகாகும்பாபிடேக நிகழ்ச்சிகளுடன் வெளிவருவது இம்மலரின் தனிச் சிறப்பாகும். ஆவணிமூல விழாவின் பட்டமளிப்பு முதலிய நிகழ்ச்சிகள், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரையுடன் இதன்கண் விளங்குகின்றன.

'திருமுகம், படும்பாடும்' என்னும் புதிய கட்டுரை ஒன்றும் இம்மலரை அழகு செய்கின்றது. சித்தாந்த வினாவிடை முதலிய தொடர் கட்டுரைகளும், செய்திகள், எதிர்காலம் முதலியனவும் வழக்கம்போல் இடம்பெற்றுள்ளன. ஞானமணங் கமழத் திருவருட் பொலிவுடன் மலரும் இம்மலரை நேயர்கள் பெற்று மகிழ்வார்களாக

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## போற்றிப் பஃறொடை

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்பன் - நாமன்னும்

வேதம்வே தாந்தம் விளக்கஞ்செய் விந்துவுடன்
நாதம்நா தாந்தம் நடுவே தம் - போதத்தால்

ஆமளவும் தேட அளவிறந்த அப்பாலைச்
சேம ஒளிஎவரும் தேறும்வகை - மாமணிசூழ்

மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி !

—உமாபதிதேவ நாயனார்.

*இறைவன், எண்ணற்ற பிறவிகளை எடுத்து எண்ணற்ற நிலைகளைப் பொருந்தியும், பிறவிகளின் நீங்கி முத்தியைப் பெற்றும் உள்ள எண்ணற்ற உயிர்களுக்கு உயிராய் எஞ்ஞான்றும் உடனாய் நீங்காது நின்று, அவைகட்கு வேண்டும் எல்லா நலங்களையும் எப்பொழுதும் புரிந்துவருகின்றான். இதற்குக் காரணம், அவனுக்கு இயல்பாய் உள்ள கைம்மாறு கருதாத கருணையேயன்றி வேறில்லை, ஆகவே, அக் கருணையை ஒருஞான்றும் மறவாது நினைந்து, அவனை உளம் உருகி எப்பொழுதும் போற்றுதலைத் தவிர, எல்லாம் வல்ல அவனுக்கு, உயிர்கள் செய்யத்தக்கது வேறு ஒன்றும் இல்லை. இவ்வாறு இறைவனது பெருங்கருணையைப் பலவாறு நினைந்து நினைந்து பலவாற்றானும் போற்றுதல் செய்த நூல்களே,* ‘தோத்திரம்’ *எனப்படும்*

திருமுறைகள். அத் திருமுறைகளில் அமைந்துள்ள அனுபவப் பொருள்களை ஆய்வு முறையில் ஒருவாறு ஏனையோரும் உணரச் செய்தற்குத் தோன்றியனவே, '**சாத்திரம்**' எனப்படும் மெய் கண்ட நூல்கள்.

இச் சாத்திர நூல்களிலும் தோத்திர நூல் முறையில் அமைந்துள்ளது, **போற்றிப் பஃறொடை**. இஃது இறைவன் எந்நிலையிலும் உயிர்கட்கு உடனாய் நின்று உதவிவரும் அருட் செயல்களைச் சாத்திர முறையில் பலபடியாக எடுத்துக் கூறி, 'போற்றி, போற்றி' என்று அவனுக்கு வணக்கங் கூறுகின்றது. இறைவன் உயிர்கட்கு உடனாயிருத்தலை,

" ஈறாய்முதல் ஒன்றாய்இரு பெண்ணாண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய் உடனானான் இடம் வீழிம்மிழலையே "

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத்தால் அறி..லாம். யாப்பு வகையில் நீண்ட அடிகளையுடைய பஃறொடை வெண்பாவாய் அமைந்தது. அதனால், 'போற்றிப் பஃறொடை' என்னும் பெயரைப் பெற்றது இந்நூல்.

இறைவனது எண்ணிறந்த அருட்செயல்கள் பலவும், 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தில் அடங்குவனவாகும். அவ்வைந்தொழில்களையும் யாவரும் உணரும்படி காட்டியருளும் அருட்டிருமேனி, கூத்தப் பெருமான் திருவடிவமே, அதனால், அவ்வருள்வடிவத்தின் பெருமையையே முதற்கண் எடுத்துக் கூறிப் போற்றுகின்றது, போற்றிப் பஃறொடை. அப்பகுதியே மேல் தரப்பட்டது.

இறைவனது திருநடனத்தை, "**நின்ற நிருத்த நிலை**" என்கின்றார் ஆசிரியர். அஃதாவது, அந்நடனத்திற்குத் தோற்ற மும் இல்லை; முடிவும் இல்லை; என்றும் நிகழ்வது என்பதாம்.

" **ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத்து** "

என்பது சேக்கிழார் வாக்கு.

இவ்வாறு, ஆதியும் அந்தமும் இல்லாது இந்நடனம் என்றும் நிகழ்வது எதன் பொருட்டு? என்று வினவுவார்க்கு, " **சேம**

ஒளிஎவரும் தேறும்வகை " என்ற விடை முதற்கண் தரப்படு கின்றது. அஃதாவது, 'சேமநிதி போல ஒருவராலும் காணப் படாது மறைந்து நிற்கின்ற ஒளிப்பொருளாகிய சிவம், தன்னை யாவரும் எளிதிற் காணும்படி அம்பலத்தில் தோன்றி நிற்கின் றது' என்பதாம்.

சிவம் யாவராலும் காணப்படாத பெருநிலை உடையது என்பதனையே, 'பூமன்னு நான்முகத்தோனாகிய பிரமன், 'புத் தேளிர்' எனப்படுகின்ற தேவர் கூட்டம், அவர் அனைவர்க்கும் தலைவனாகிய இந்திரன், திருமகளும் கௌத்துப மணியும் பொருந்திய மார்பையுடைய திருமால், உயர்ந்தோர் நாவில் நீங்காது நிற்கின்ற வேதங்கள், அவ்வேதங்களின் முடிவாகிய உபநிடதங்கள், வேத வேதாந்தங்களுக்கு மூலமாகிய விந்து நாதங்கள் எல்லாம் தங்கள் அறிவுகொண்டு இயன்ற அளவி லெல்லாம் தேடிப்பார்த்தும் அறியப்படாது, எல்லாவற்றிற்கும் அப்பாலாய் மறைந்து நிற்கின்ற சேம ஒளி' என்று அருளினார்.

இவ்வாறு ஒருவராலும் அறியப்படாத பரம்பொருள், தானே தனது கருணை காரணமாக அனைவருங் காணும்படி எளிதாக நடன உருக்கொண்டு தில்லை இடத்தில் அம்பலத்தில் வந்து நிற்கின்றது என்றால், அதற்கு நாம் செய்யும் கைம்மாறு யாது? அதனைப் போற்றியும், புகழ்ந்தும் வணங்குவதைத் தவிர வேறொன்றில்லை. அதனாலேதான்,

" ... ... ... ... அப்பாலைச்
சேம ஒளிஎவரும் தேறும்வகை — மாமணிசூழ்
மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி "

என்று அருளினார் உமாபதிதேவ நாயனார். இதனை,

" ஆயும் நுண்பொரு ளாகியும் வெளியே
அம்பலத்துள் நின்று ஆடுவார் "

என்று வியந்து போற்றினார், சேக்கிழார் நாயனார். மேலும் அவர், 'பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாய் இருப்பது; அது, கருணையே உருவமாகி, அற்புதக் கோலம் நீடி, திருச் சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடஞ்செய்கின்றது,

என்றும் போற்றினர். சிறிது சிந்திக்கப் புகும்பொழுது உமாபதிசிவம் தமது போற்றுதலைச் சேக்கிழார் திருமொழியின் வழியிலே நின்று செய்துள்ளார் என்று நினைக்கத் தோன்றுகின்றது. சிவஞானம் கைவரப் பெற்றவர்கள் இந் நடனத்தை ஒருபோதும் மறவாது நினைவதையே கட்டமையாகக் கொள்கின்றனர் என்பதை,

"நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே"

என்ற திருஞானசம்பந்தர் திருவாக்காலும்,

"அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனே"

என்ற திருநாவுக்கரசர் திருவாக்காலும் அறியலாம்.

'காண்டற் கரிய கடவுளாகிய இறைவன் இவ்வாறு கருணையே உருவமாய் அனைவரும் காணும்படி தில்லை அம்பலத்துள் நிற்றல் அரியதினும் அரியதுதான்; ஆயினும், அதனை அவ்வாறு அனைவரும் காண்பதனால் அடையும் பயன் என்னை?' என மேலும் வினவுவார்க்கு, "**பிறவி வழக்கறுக்க**" என்னும் விடை அடுத்துக் கூறப்படுகின்றது.

'வழக்கு' என்பது, 'தொடர்ச்சி' எனப் பொருள் தரும். பிறவி, 'இன்ன காலத்தில் தொடங்கிற்று' என்றும், 'இன்ன காலத்தில் முடிவுறும்' என்றும் சொல்ல இயலாத நிலையை உடையது. 'பிறவி முதலில் வந்ததோ, வினை முதலில் வந்ததோ' என்ற ஓர் ஆராய்ச்சி, சமய உலகில் பெரியதோர் ஆராய்ச்சியாய் உள்ளது. இதற்கு உண்மையான விடை சைவசித்தாந்தத்திலே தான் சொல்லப்படுகின்றது. அதனை இப்பொழுது விளக்குதற்கில்லை; அதுநிற்க.

பிறவியும், வினையும் ஆகிய இரண்டில் இன்னது முதலில் வந்தது என வரையறுத்துக் கூற இயலாது என்றே வைத்துக் கொண்டாலும், வினையால் பிறவியும் பிறவியால் வினையும், தொடர்ச்சியாய் முடிவின்றி வந்துகொண்டிருக்கின்றன என்பதை மறுத்தல் இயலாது. ஏனெனில், "வித்தும் மரமுமாகிய இரண்டில் இன்னதுதான் முதலில் தோன்றிற்று என்று வரை

யறுத்துச் சொல்ல இயலாவிடினும், வித்திலிருந்து மரமும், மரத்தி லிருந்து வித்தும் தொடர்ச்சியாய் வந்துகொண்டிருக்கின்றன என்பதை மறுக்க இயலாததுபோல என்க.

எனவே, வினையால் பிறவியும், பிறவியால் வினையுமாய் இடைவிடாது தொடர்ந்து வருகின்ற தொடர்ச்சியில் - சுழலில் - அளவற்ற காலமாய் அகப்பட்டுத் துன்புறுகின்ற உயிர் அத் தொடர்ச்சியை அறுத்துக்கொண்டு அதினின்றும் தப்பி நிலைத்து நின்று இன்புறுதல், மன்றுள் நின்ற நிருத்த நிலையைக் காண்கை யினாலே கிடைப்பதாம். அஃது எவ்வாறெனில்,

முதற் பொருளாகிய இறைவனை அறியாதிருத்தலே அஞ்ஞானமும், அந்த அஞ்ஞானமே பிறவிக்குக் காரணமும் ஆகும். இறைவனை அறிந்துகொள்ளுதலே ஞானமும், அந்த ஞானமே பிறவியறுதலாகிய முத்திக்குக் காரணமும் ஆகும். ஆகவே, மன்றுள் நின்ற நிருத்தம் இறைவனது ஐந்தொழிலை உணர்த்தி அவனை உணரும் ஞானத்தைத் தருதலின், அதனை வணங்குதலால் பிறவி அறும். பிறவி அற்ற நிலையே ஆனந்த நிலையாம். ஆகவே, "எவரும் தேறும்வகை" என்றது ஞானத்தைத் தருதலையும், "பிறவி வழக்கறுக்க" என்றது, ஞானத்தின் வழியாக ஆனந்தத்தைத் தருதலையும் குறித்தவா றுயின. திருநடனத்தில் ஆனந்தம் விளைகின்றது என்பதை,

"இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்"

என்ற பெரியபுராணத்தால் அறியலாம். தில்லைத் திருநடனத் தின் ஆனந்தத்தை நுகர்ந்த மணிவாசகர், திருக்கோவையாரில் ஒரு பாடலை,

"ஆனந்த வெள்ளத் தழுந்துமோ ராருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றுதுமுற் றுதிவ் வணிநலமே"

என ஆனந்த வெள்ளமாய்ப் பொழிந்து காட்டுகின்றார்.

இன்னும், திருநடனத்திஞல் குறிக்கப்படுவன ஐந்தொழில் களாதலின், அந்நடனத்தை இடையருது புரிந்து நிற்றல், ஐந் தொழில்களையும் இடையருது செய்தலேயே தெரிவிக்கின்றது. எனவே, இந்நடனம் நின்றதென்ருல், ஐந்தொழிலும் நின்றனவே யாம். ஐந்தொழில்களை இறைவன் இயற்றுதல், உயிர்களின் பிறவி வழக்கை அறுத்தற்பொருட்டே. ஆதலின், ஐந்தொழில் நடனத்தை இயற்றி நிற்றல் பிறவி வழக்கறுக்கவே என்பது விளங்கும். அதஞல்,

“ ... ... ... ... ...மாமணிசூழ்
மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலேபோற்றி ”

என்று வாயாரப் போற்றிஞர், உமாபதி தேவ நாயஞர்.

அப்பால் அந்நடனத்தின் பொருளை விளக்கத்தொடங்கி,

“ ... ... ... ... ...குன்ருத
பல்லுயிர்வெவ் வேறு படைத்தும் அவைகாத்தும்
எல்லே இளைப்பொழிய இட்டுவைத்தும்—தொல்லேயுறும்
அந்தம் அடிநடுஎன் றெண்ண அளவிறந்து
வந்த பெரிய வழிபோற்றி !”

என்று அருளிஞர்.

உயிர்களோ எண்ணிறந்தன; அவைகளுக்கு உடம்பைக் கொடுத்து உலகத்தில் இயங்கச்செய்வதே படைத்தல், அவ் வுடம்புகள் எத்தனை எத்தனை வகையாய் உலகத்தில் காணப் படுகின்றன ! ஓரறிவுயிராகிய தாவரங்களில்தான் எத்தனை வகை ! மற்றும் ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, நடப்பன என்பவற்றுள் ஒவ்வொன்றிலும் எத்தனை எத்தனைவகை ! இவைகளில் ஒன்று இருப்பதுபோல மற்ருென்று இருப்பது இல்லே. இவற்றின் பல்வேறு வகைப்பட்ட வடிவங்களையும், குணங்களையும், செயல்களையும் இப்படித்தான் அமைக்க வேண் டும் என்று இறைவனுக்கு யார் கற்பித்தார்கள் ? ஒருவரும் இல்லே. தனது இயற்கையறிவிஞலும், முடிவிலாற்றலாலும் அன்ருே இறைவன் இத்தனைப் பிறவிகளையும் வியக்கத்தக்க வகையில் படைத்தான் ! படைக்கின்ருன் ! இறைவனது எண்குணங்கள், இயற்கையுணர்வு, முற்றும் உணர்தல், முடிவிலாற்றல் முதலியனவாதல் நினைவு கூர்தற்கு உரியது.

இங்ஙனம் இவைகளைப் படைத்தது மட்டும் அன்றி, கருப் பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் உணவும் பிறவும் அளித்துக் காக்கின்றானன்றோ! தாயின் வயிற்றில் உள்ள குழவிக்கு அவளறியாதபடி இறைவன் உணவு ஊட்டிக் காப்பாற்றுதலைத் திருக்குற்றாலத் தலபுராணச் செய்யுள் ஒன்று மிக அழகாக விளக்குகின்றது:

" ஈயறியா பூந்தேனே எழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிலிருந் தமுதூட்டும் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண்டோ நிகிலபரம் பரமூர்த்தி."

இச்செயல்களால் அவன் அடையும் பயன் எள்ளளவேனும் உளதோ! இவைகளை எண்ணிப் பார்க்குங்கால் அறிவுடையோர்க்கு அவனிடத்து உள்ளம் உருகாமல் இருக்குமோ! அதனால்தான் அவர்கள் அவனைப் பலவகையாலும் பாடுகின்றனர்; பணிகின்றனர்.

உயிர்களைப் படைத்தலும், காத்தலும் நல்லனவே; ஆயினும், அவைகளை அழித்தும் விடுகின்றானே, அஃது எற்றுக்கு? என்று வினவலாம். அதற்காகவே,

" எல்லை இளைப்பொழிய இட்டுவைத்தும் "

என்றார். 'அழித்தல்' என்றவுடன், அச்சமும், வருத்தமும் தோன்றலாம். ஆயினும், அது பெரியதொரு நன்மையின் பொருட்டே செய்யப்படுகின்றது என்பதனை உணர்தல்வேண்டும். அஃதாவது, உடம்பொடுகூடிய உயிர்கள், அவ்வுடம்பினால் வரும் துன்பங்களை நுகர்ந்து, 'பிறப்பு, இறப்பு' என்னும் சூழலில் அகப்பட்டுச் சுழன்று, பெரியதோர் இளைப்பினை அடையும். அவ்விளைப்பு நீங்குதற்பொருட்டு, உயிர்களை உடம்பினின்றும் பிரித்துச் சிறிதுகாலம் ஓய்வு பெற்றிருக்கச் செய்தலே அழித்தல் என்பது. அதனால், அதுவும் நல்லதேயன்றித் தீயதன்று. " அழிப்பு இளைப்பாற்றல் " என்பது சிவஞான சித்தி.

'மறைத்தல்' என்பது, இறைவன் உயிர்கட்குத் தன்னைக் காட்டாது உலகத்தையே காட்டி, அவ்வுலக இன்பத்தை நுகரச் செய்தல். இதுவும், அவைகள் தன்னை யறியும் பக்குவத்தை வருவித்தற் பொருட்டேயாகும்.

'அருளல்' என்பது, பாசங்களை எல்லாம் அறுத்து உயிர்களைத் தன் திருவடியில் சேர்த்துக்கொள்ளுதல். ஐந்தொழில்களில், 'மறைத்தல்' என்பது காத்தலிலும், 'அருளல்' என்பது அழித்தலிலும் ஒருவாறு அடங்குவனவே. ஆதலின், இங்கு அவற்றை அடக்கி, 'படைத்தல், காத்தல், அழித்தல்' என மூன்றாகவே கூறினார். உயிர்களின் பொருட்டு இறைவன் செய்யும் இச்செயல்களை, 'பெரிய வழி' என்கின்றார் உமாபதி சிவம் ஏன்?

"பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை"

என்றபடி, உயிர்கள் அளவில்லாமல் இருத்தலின், அவைகள் பொருட்டுச் செய்யப்படுகின்ற இவ்வைந்தொழில்களுக்கும் தோற்றமும் இல்லை; முடிவும் இல்லை. இதனையே,

"அந்தம் அடி நடுஎன்று எண்ண அளவிறந்து
வந்த பெரிய வழி"

என்றார். திருவாசகத்தில் சிவபுராணமாகிய சிவனது அனாதி முறைமையான பழமை எனப்படுவதும் இதுவே. அதனால், சிவபெருமானது ஐந்தொழில்கள் அனாதியாய் நடைபெற்று வருவன என்பது விளங்கும்.

இங்ஙனம், நடன நிலையையும், அதன் பொருளாகிய ஐந்தொழிலையும் எடுத்தோதிப் போற்றிய அளவிலே இறைவனது எல்லாச் செயல்களையும் தொகுத்துப் போற்றியதாயிற்று. ஆயினும், அவற்றை வகுத்து ஓதும் முறையால், இறைவன் ஆன்மாக்களை ஆணவத்தில் அழுந்திக்கிடந்த கேவல நிலையிலிருந்து சகல நிலையிற் கொண்டுவரும் அருட் செயலையும், அச் சகல நிலையில் பலவகைப் பிறப்புக்களில் மனிதப் பிறப்பை அடைவிக்குங்கால் செய்கின்ற பேருதவிகளையும், அம்மனிதப்பிறப்பில் துரியாதீத நிலையில் மூச்சுக் காற்றும் இன்றி மூடமாய்க் கிடக்கின்ற உயிரை எழுப்பிச் சாக்கிரத்தை அடைவித்துப் புலன்களை நுகர்விக்கின்ற அறக்கருணையையும், அங்ஙனம் நுகரும்பொழுது அறத்தைச் செய்யாமல் மறத்தைச் செய்யும் குற்றத்தை நரக வேதனையினால் போக்குகின்ற மறக்கருணையையும், அங்ஙனம் பிறந்தும் இறந்தும் உழலுகையில் இருவினையொப்பு மல

பரிபாகம் வந்தவுடன் தனது அருட்சத்தியைப் பதிவிக்கும் அருள் நிலையையும், அச்சத்திநிபாதத்தின் வழியே குருவாய்வந்து ஞானத்தை உபதேசத்தருளும் அருமையையும், அவ்வுபதேசத்தின் பின் தத்துவங்களின இயல்புகள், தன்னியல்பு ஆகிய எல்லாவற்றையும் இனிது விளங்கக் காட்டுகின்ற வியப்பினையும், அக்காட்சியின் பயனாக அவ்வுயிர்களைத் தானாகச்செய்து தன்னொடு இரண்டறச் சேர்த்துக்கொண்டு, என்றும் இன்பம் அளித்துவரும் பேரின்பப் பேரருளையும் முறையாக எடுத்தோதிப் போற்றி முடிகின்றது போற்றிப் பஃறொடை.

முடியுமிடத்தில்,

" ... ... ... ...எப்பொருளும் - முன்னம்எனக்கு
இல்லாமை காட்டிப்பின்பு எய்தியவா காட்டிஇனிச்
செல்லாமை காட்டுஞ் செயல்போற்றி "

என்றது,

" காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவம்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய் "


என்ற திருவாசகத்தை நினைப்பிக்கின்றது. எங்கள் குருஞான சம்பந்தரும் இப்பேற்றினையே தம் ஆன்மார்த்தமூர்த்தியிடம் வேண்டிக்கொள்ளுதலை,

" பேரன்ப னல்லேன் பிழைசெய்யே னல்லேன்
ஓரன்பும் இல்லா உலுத்தனேன் - பேரன்பு
காட்டிஎனைக் காட்டிஉனைக் காட்டியின்பத் தொட்டிலிலே
ஆட்டிவளர் சொக்கநா தா "

என்று அருளிய வெண்பாவால் அறியலாம்.


இங்ஙனம் இறைவனது எல்லையில்லாப் பெருங்கருணையைச் சாத்திரமுறையில் இனிது விளக்கிப் போற்றுவதாகிய-போற்றிப் பஃறொடையை அனைவரும் உணர்ந்து போற்றி, எல்லா நலங்களும் இனிது எய்துவார்களாக.

நெல்லையில், தருமையாதீனம் 6 ஆவது மகாசந்நிதானம்
குருமூர்த்த ஆலய மகா கும்பாபிஷேகவிழாவில்:




யாகசாலையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள்

ஆழ்வார்குறிச்சியில்




தருமையாதீனத் திருமடத்தின் தோற்றம்

திருமையாதீனம்




சிவசைலம் மடம்

தருமையாதீனம்



சிவசைலம் மடம்

தருமையாதீனம்



சுசீந்திரம் மடம்

நெல்லையில், தருமையாதீனம்
6 ஆவது குருமகாசந்நிதானம் குருமூர்த்த ஆலய
மகாகும்பாபிஷேகத்திற்குப் பின்னர்




திருமடத்திற்கு எழுந்தருளல்

தருமையாதீனம் 6 ஆவது குருமகாசந்நிதானம்

*ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்*

# குருமூர்த்த ஆலய மகாகும்பாபிஷேக விழா நிகழ்ச்சி

## வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்.

பொன்னி நதிக்கரையிலும் பொருநைக் கரையிலும் தமிழும் சைவமும் தழைக்கச்செய்து வருகிறது நம் தருமைத் திருமடம். நெல்லையின் தாமிரபர்ணிக்கரை சிந்துப்பூந்துறை என்ற சிறப்புப் பெயரோடு திகழ்வது. இங்குள்ள தருமைத் திருமடம் தவச்சாலையாகத் தெய்வத் தமிழ்க் கலாசாலையாகத் திகழ்ந்து வந்துள்ளது.

" எழில் வேள்வி மலையில் ஓர் அம்மை எங்கே என்று
இயம்பியே திருமுன்னிற்கும் சம்பந்தனுக்கு அருள்செய் என்று
வள்ளிக்கருள் செய்த சைவநாயகன் "

என்ற க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழிலும் 'வள்ளியம்மை யில்லையோ என்ன அவள் சிரத்தைநீட்டி வையம் அறிந்திட இருக்கின்றேன் என்ற மொழிகேட்டு மகிழ்ந்து நின்றதுய்யவன்' என்றதனிப் பாடற்பகுதியிலும் பாராட்டப் பெறுபவர்களான தருமையாதீனத்து ஆறுவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த தேசிக சுவாமிகள், பல நாட்கள் தங்கி அருள்நெறி பரப்பிய அறநிலயமாக விளங்கிய பெருமைக்குரியது. ஸ்ரீ வெள்ளியம்பலவாணர், ஸ்ரீ தமிழாகரர் முதலிய அடியார் பெருமக்களின் உறைவிடமாய்த் திகழ்ந்த சிறப்பினது. ஸ்ரீ வெள்ளியம்பலவாணரிடம் கல்வி பயின்ற ஸ்ரீ சம்பந்த சரணாலய முனிவரால் குருதோத்திரமாகச் செய்யப்பெற்ற சிகாரத்னமாலையில் பாராட்டப்பெற்ற ஆறுவது குருமூர்த்திகளின் குருமூர்த்தத்தைப் பெற்றுள்ள பெருஞ்சிறப்புக்குரியது நெல்லைத் திருமடம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 6 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்தம் இத்திருமடத்தின் எதிரில் உள்ளது. இந்தக் குருமூர்த்தத்தைப் பெரும்பொருட் செலவில் வானளாவிய திருக்கோபுரத்தோடும் திருச்சுற்றோடும்

நுழைவு வளைவோடும் மிக அழகிய ஆலயமாக அமைத்தருளிய பெருமைக்குரியவர்கள் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாட்சியில் தருமையாதீனக் குருமூர்த்தங்கள் பலவும் ஆலயங்களாக அமைக்கப்பட்டு வருவதை அன்பர்கள் அறிவர். ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் இவ்வாதீனத்தின் 2 ஆவது குருமூர்த்திகள். அதிதீவிர பக்குவநிலையை அடியவர்க்குணர்த்திய அருளாளர். இவர்கள் ஆலயம் முதலாகத் தொடர்ந்து குருமூர்த்தங்களை ஆலயங்களாக எடுத்துச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தருளி வருவதைச் சைவ உலகம் அறிந்து மகிழ்ந்து வருகிறது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுக்கு ஆறுவது குருமூர்த்திகளின் அருளிப்பாடு அடிக்கடி தோன்றி வந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள் அதிலிருந்து இக்குருமூர்த்தத் திருப்பணியிலேயே திருவுளம் செலுத்தி வந்தார்கள். பலகாலும் குருதோத்திரம், இவர்கள், வரலாறு கந்தபுராணச் சுருக்கம் முதலிய நூல்களைச் சிந்தித்தவண்ணமிருந்தார்கள்.

தருமையாதீனத்தின் 6 ஆவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் சிறந்த சிவயோக நிலைகள் பலவற்றை உலகிற்குணர்த்தியவர்கள். தெய்வத் தமிழ்க் கலைஞர்கள் பலரை உருவாக்கியவர்கள். இவர்கள் காலத்தில் தருமையாதீனத்தில் பதினெறொடுக்கம் மிக்க சிறப்போடு விளங்கியது. அதில் அடியார்கள் பலர் இரவு பகலின்றி நிட்டை கூடியிருந்தனர். முப்பொருள் உணர்ந்த முனிவர் திலகமாக விளங்கிய ஸ்ரீ சம்பந்தசரணலயர் இந்த ஞானதேசிகர்பால் உபதேசம் பெற்றவர். இக்குருமூர்த்திகள் தக்ஷிண யாத்திரையாகப் புறப்பட்டுத் திருநெல்வேலிச் சிந்துபூந்துறை மடத்தில் தங்கியிருந்தபொழுது அந்நகரில் அறச்சாலைமடத்ததிபராக இருந்த புலவர் ஒருவர் சிதம்பரம் குகைமடத்தைச்சார்ந்த ஆன்மானந்தவாதியான ஞானப்பிரகாசரிடம் உபதேசம் கேட்டு தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய முத்திநிச்சயத்திற்கு மறுப்புரையும் எழுதினர். என்ன எழுதியும் மனவமைதி பெறாது அலைந்தார். இறுதியில் அவர் தம் நல்வினைப்பயனாகச் சிந்துபூந்துறை மடத்தில் இக்குருமூர்த்திகளைத் தரிசித்து மன அமைதிபெற்றுஞானோபதேசம் பெற்று குருநாதரால் தமிழாகரர் என்ற தீட்சாநாமம் சூட்டப்பெற்று ஆதீன அடியவரானார்.

இக் குருமூர்த்திகள் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அற்புத நிகழ்ச்சி ஒன்று வேள்விமலையில் குமரகோயிலில் நிகழ்ந்தது. வேள்விமலைக்கு இவர்கள் எழுந்தருளி முருகனை வழிபாடு செய்தருளும்போது 'இங்கு வள்ளித்தாய் இல்லையோ' என்று கேட்க பெருமான், 'சம்பந்தனுக்கு அருள்செய்' என்றுகூறிய வண்ணம், வள்ளிஅம்மை இதோ இருக்கிறேன் என்று திருமேனி வளைந்து காட்சி வழங்கினர். இந்நிலையிலேயே வள்ளியம்மைத் திருக்கோலம் இன்றும் உள்ளது. க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழிலும் இச்செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் காலத்து விளங்கிய அடியவர்களில் ஸ்ரீ சம்பந்த சரணலயர் மைசூர் மன்னர் அழைப்பிற்கிணங்க மைசூர் சென்று மன்னரால் உபசரிக்கப்பெற்று மன்னர் வேண்டுகோளின்படிக் கந்தபுராணச் சுருக்கம் என்ற நூலை எழுதித் தமிழுலகிற்கு வழங்கினார்கள். குருதோத்திரமாகச் சிகாரத்னமாலை என்ற தோத்திர நூல் ஒன்றையும் அருளிச்செய்தார்கள். வெள்ளியம்பல வாணரிடம் பாடம் கேட்ட ஸ்ரீ படிக்காசுத் தம்பிரான் சுவாமிகள் இவர்கள்பால் உபதேசம் பெற்றவர்கள்.

இவ்வாறு அருணலம் பழுத்த அருளரசராய் விளங்கிய ஆறுவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருமூர்த்தத்தை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் மிகச்சிறந்த ஆலயமாக எடுத்து எல்லையில்லா அருள் நலங்களை நெல்லை வாழ் மக்கள் பெறுதற்குரிய வகையில் செய்தருளியுள்ளார்கள். கண்ணுதலும் கண்டக்கறையும் கரந்தருளி மண்ணிடையில் மக்கள் மலமகற்ற எழுந்தருளிய குருமூர்த்திகள் ஆலயத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து வழிபட வழி செய்தருளிய கயிலைக் குருமணி அவர்களைச் சைவ நல்லுலகம் பாராட்டுகிறது.

21—8—64 வெள்ளிக்கிழமை மகாகும்பாபிஷேகம் என்று நாள் நிச்சயிக்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து திருப்பணி வேலைகளைச் செய்வித்து மகா கும்பாபிஷேகத் திட்டங்களையெல்லாம் கட்டளையிட்டருளி தருமைக்கு எழுந்தருளியிருந்தார்கள். 18—8—64 ஆவணிமூல விழா. இவ்விழா நிகழ்ந்ததும் மீண்டும் மகாகும்பாபிஷேகத்திற்கு எழுந்தருளுவதாகத் திட்டம். நிர்வாகஸ்தர்கள் பலரையும் நெல்லையில் இருந்து நேரில் முன்னேற்பாடுகள் செய்விக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. வேலைகள் பலவும்

விரைந்து நடந்தன. தருமையாதீனத்திற்கே உரிய சிறப்புக் களுடன் யாகசாலை முதலியவற்றை அமைக்கும் பணியாளர் கள் நெல்லையில் தங்கி பந்தல் முதலிய பலவற்றையும் கைவண் ணம் காட்டி அலங்கரித்தனர். திருக்கோயிலுக்கு அருகில் யாகசாலை அமைக்கப்பெற்று மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டது.

19—8—64 புதன்கிழமை காலை 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்து வழிபட்டு நெல்லைக்கு எழுந்தருளியானார்கள். மாலை 2 மணிக்கு நெல்லை சிந்துபூந்துறையில் உள்ள தருமையாதீன மடத்திற்கு எழுந்தருளினார்கள்.

அன்று மாலை யாக காலபூஜை தொடங்கியது. அன்பர்கள் கூட்டம் ஆயிரம் ஆயிரமாகப் பெருகியது. ஆதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் சிவாகம வித்துவான். சிவஸ்ரீ. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் வைதிக கிரியைகள் பலவற்றையும் வழுவாது செய்வித்தார்கள். வேதம், சிவாகமம், திருமுறை மங்கல வாத்தியங்கள் பலவும் முழங்க ஒவ்வொரு யாககால பூஜையும் சிறப்பாக நடைபெற்றது.

20—8—64 வியாழக்கிழமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு மௌன உபவாச நாள். கந்தபுராணச் சுருக்கம் அரங்கேற்றம் செய்த இடமாகிய திருச்செந்தூருக்குக் காலையில் எழுந்தருளி செந்திலாண்டவனை வழிபட்டு மகாகும்பாபிஷேக மலராக வெளியிட இருக்கும் கந்தபுராணச் சுருக்க நூலைச் செந்திலாண்டவன் திருவடியிணைகளில் சாத்தி மகிழ்ந்தார்கள்.

பூர்ணாகுதி வழிபாடு காலை 10 மணிக்கு நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழிபாடு முடிந்ததும் திருமடத்திற்கு எழுந்தருளி அன்பர்கட்கு அருளாசி வழங்கினார்கள். திருமடத் தைச் சார்ந்தோர் அனைவர்க்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் புத்தாடைகள் வழங்கியருளினார்கள். இடைவேளைகளில் குருதோத்திரம், குருமூர்த்திகள் வரலாறு, கந்தபுராணச் சிந்தனைகள். மாலை 6 மணிக்கு நெல்லையப்பர் வழிபாடு. இரவு 8 மணிக்கு யாககாலபூஜை. இந்தக் காலபூஜை மிகமுக்யமான யாககாலபூஜையானதால் அன்பர்கள் கூட்டம் பெருகியிருந்தது.

21—8—64 காலை 5 மணிக்கு மங்கலவாத்தியங்கள் முழங்கின. வைதீக கிரியைகள் பலவும் தொடங்கி நடைபெற்றன. திருமுறை வேத சிவாகம பாராயணம் முதலியன நிகழ்ந்தன. நிகழ்ச்சிகள் அவ்வப்போது ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. காலை 7 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். யாககால பூஜை சிறப்பாக நடைபெற்று நிறைவுற்றது. மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலய ஆஸ்ருதம் சிவஸ்ரீ. ம. க. சுந்தரேசபட்டர் அவர்கள் பிரதான யாககடத்தைத் தம்சிரசில் எழுந்தருளச்செய்துகொள்ள யாககலசங்கள் அனைத்தும் முறையேஎழுந்தருளுவிக்கப்பெற்றன. திருமுறை, வேத சிவாகமம், முதலிய பாராயணங்களுடன் மங்கல வாத்யங்கள் முழங்க யாக கடங்கள் வலமாக எழுந்தருளுவிக்கப் பெற்று உரிய இடங்களை அடைந்தன. திருக்கோயில் சுற்றுப் புறங்கள் வீதி மாடவீடுகளிலெல்லாம் மக்கள் குழுமியிருந்தனர். சரியாக 7-45 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் அரஹர முழக்கத்தோடும் தோத்திர ஒலியோடும் நடந்தது. 8 மணிக்கு மூலஸ்தான மூர்த்திக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பெருமக்கள் பலருக்கும் அன்பர்கட்கும் மகாப்பிரசாதங்கள் வழங்கி ஆசியருளினார்கள். தொடர்ந்து மகாபிஷேகம் நடைபெற்றது.

சென்னை மாநில சபாநாயகர் திரு. எஸ். செல்லபாண்டியன், பி. ஏ., பி. எல்., அவர்கள் விழாவில் கலந்துகொண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சபாநாயகருக்குப் பொன்னாடை போர்த்திப் பிரசாதங்கள் வழங்கினார்கள்.

இவ்வாறு பக்திவெள்ளத்தில் பரவச நிலையோடு திளைத்த அன்பர்கள் மகாகும்பாபிஷேகம் நிகழ்த்திவைத்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களைத் திருமடத்திற்கு மேள வாத்தியங்களோடு எழுந்தருளச்செய்து கொலுவிருத்தி வழிபாடு செய்து வணங்கித் திருநீறு பெற்றுக்கொண்டார்கள். இந் நிகழ்ச்சிகளில் சென்னை சபாநாயகர் திரு. எஸ். செல்லபாண்டியன் பி. ஏ. பி. எல். அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

மாலை ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர் ஆலயத்தில் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து திருவாபரணங்கள் சார்த்தி அலங்காரம் செய்யப்பெற்றிருந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்த தரிசனம்செய்து பரிவாரங்களுடன் கன்னியாகுமரிக்கு எழுந்தருளினார்கள். இரவு

7½ மணிக்குக் கன்னியாகுமரியில் பட்டாடை சார்த்தச்செய்து அம்பிகையை வழிபட்டு இன்புற்றார்கள். கன்னியாகுமரியம்பிகை சந்நிதியில் அனைவரும் உளமுருகி நின்று வழிபட்டனர். இரவு மீண்டும் ஆறுபடை வீடுகளில் திருஏரகமாகியதும் ஆறுவது குருமகாசந்நிதானம் அவர்கட்கு வள்ளியம்மையார் அருட்காட்சி வழங்கியதுமான வேள்விமலை குமரகோயிலுக்கு எழுந்தருளி வழிபட்டு நெல்லைக்கு எழுந்தருளினார்கள்.

23—8—64 திங்களன்று ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருமூர்த்தத்திற்குப் பெரிய திட்டத்தில் அபிஷேகம் நடத்தப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருப்பரங்குன்றம், மதுரை முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு தருமைக்கு எழுந்தருளினார்கள்.

## தோத்திர சாத்திர மாநாடு

மகாகும்பாபிஷேக விழாவை முன்னிட்டு 19, 20, 21 தேதி களில் நெல்லை, தருமையாதீன மடத்தின் திருமுன் அமைக்கப் பட்டிருந்த அலங்காரப் பந்தலில் தோத்திர சாத்திர மாநாடு நடைபெற்றது. திருமுறை, சைவ சித்தாந்தம், பண்டார சாத்தி ரம் ஆகிய நூல்களின் திருநாட்களாக இம்மூன்று நாட்களும் அமைந்தன.

19–8–64 புதன்கிழமை மாலை 6 மணிக்கு மாநாடு தொடங்கப் பெற்றது. வேலூர் தேவஸ்தானம் திரு. சொக்கலிங்க ஓதுவார் கடவுள் வாழ்த்துப் பாடினார். நெல்லை மாவட்ட நீதிபதி திரு. பலராமையா பி. ஏ., பி. எல்., அவர்கள் தொடக்கஉரை நிகழ்த்து கையில்திருமுறைப்பெருமைகளையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுறைகளுக்குச் செய்துவரும் உரைவெளியீட்டுப் பணிகளையும் பாராட்டினார். பேராசிரியர் திரு. சிவராம கிருஷ்ணன் எம். ஏ., நெல்லை வித்துவான் திரு. நவநீதகிருஷ்ண பிள்ளை, நெல்லை வித்துவான் திரு. ம. சிவசம்பு, திருமதி, இராசாத்தி குஞ்சிதபாதம் பி. ஏ., எம். எல்., ஏ., ஆகியோர் சிவவழிபாடு, குருவழிபாடு, அடியார் வழிபாடு, தேவி வழிபாடு ஆகிய தலைப்புக்களில் திருமுறைக் கருத்துக்களை ஆராய்ந்து விரிவுரையாற்றினர். இந்தியப் பொதுப்பண்பை விளக்கும் வகையில் காசிவிசுவேசர் ஆலய விமானத்தைஒத்து ஸ்ரீதிருஞான சம்பந்த தேசிகர் ஆலயத்தை வடஇந்திய தென்னிந்திய சிற்ப ஒற்றுமையுடன் அமைத்துள்ளதை திருமதி. இராசாத்தி குஞ்சித பாதம் அவர்கள் பாராட்டினர்.

தருமையாதீனம் சென்னை சமயப்பிரசா நிலையம் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

20—8—64 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இரண்டாம் நாள் மாநாடு தொடங்கப்பெற்றது. சென்னை சமயப்பிரசார நிலயம், சங்கீதபூஷணம் திரு. எஸ். சுவாமிநாதன், சீகாழி தேவஸ்தானம்தேவார இசைமணி திரு. எஸ். திருஞானசம்பந்தம் கடவுள் வாழ்த்துப் பாடினர்.

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரிமுதல்வர் செந்தமிழ்ச்செம்மல் திரு. அ. சீனிவாசராகவன் எம். ஏ., அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார். சமயப் பொதுமைகளையும் சைவ சித்தாந்தத்தில் எல்லாச் சமய தத்துவங்களும் அடங்கியுள்ள சிறப்பையும் எடுத்துக்காட்டினார்.

ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர். ஆதீனப் புலவர், வித்துவான். திரு. எஸ். அருணைவடிவேலு முதலியார், ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர், அண்ணமலைப் பல்கலைக் கழகம் மொழியியல்துறை செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., ஆகியோர் பதி, பசு, பாச இயல்புகளைப் பற்றிப் பேசினர். வித்துவான் திருமதி பாலம்பாள் பயனியல் பற்றிப் பேசினார். இரவு 8 மணிக்கு சங்கீதபூஷணம் திரு. பி. சுவாமிநாதன், தேவார இசைமணி. திரு. எஸ். சம்பந்தம் ஆகியோரின் தேவார இன்னிசையரங்கு நிகழ்ந்தது. வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள். வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

## மகாகும்பாபிஷேகத் திருநாள்

21-8-64 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கந்தபுராணச் சுருக்க நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாசியோடு விழா தொடங்கப்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆறுவது குருமூர்த்திகளின் அருளியல்புகளை விவரித்தும் குருபத்தியின் சிறப்பை விளக்கியும் ஸ்ரீசம்பந்தசரணலையர் இயற்றியருளிய கந்தபுராணத்தின் சிறப்புக்களைக் குறிப்பிட்டும் அருளாசி வழங்கியருளினார்கள்.

சென்னை மாநில சபாநாயகர் திரு. எஸ் செல்லபாண்டியன் பி. ஏ., பி. எல்., அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தி விழாமலரை

வெளியிட்டார். சபாநாயகர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் செய்துவரும் அருட்பணிகளைப் பாராட்டி மக்கள் தன்னெஞ்சறிவது பொய்யாது செய்யவேண்டிய நாட்டுப் பணிகளைக் குறிப்பிட்டு மக்கள் கடவுள் நம்பிக்கை, குருபக்தி உடையவர்களாய் வாழவேண்டுமென்று கூறி விழாமலரை வெளியிட்டார்.

செந்தமிழ்ச் சிவநெறிச்செல்வர், திரு. வி. ஆறுமுகம் பிள்ளை முருகன் பெருமைகளையும், கந்தபுராணச் சிறப்பையும் கந்தபுராணச் சுருக்கம்பற்றிப் பேசிய பேராசிரியை திருமதி. கோ. பாகீரதி எம், ஏ. அவர்கள் கந்தபுராண வரலாற்றை விவரித்தும், கந்தபுராணத் தத்துவங்களை விளக்கியும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருட்பணிகளைப் பாராட்டியும் பேசினர்.

சென்னை சமயப்பிரசார நிலயம் வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினர்கள். தருமையாதீன ஓதுவாமூர்த்திகளின் திருமுறைப் பாராயணம் நிகழ்ந்தது.

மாலை 6 மணிக்கு மாநாடு தொடங்கப்பெற்றது. நெல்லை, தினமலர் ஆசிரியர் திரு. டி, வி. இராமசுப்பையர் தொடக்கவுரை நிகழ்த்தினர்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் கருணையால் நெல்லை மக்கள் பெற்ற பயனைக் குறிப்பிட்டுப் பேசினர். பேராசிரியர் பைந்தமிழ்ச் செம்மல் திரு. கு, அருணசலக் கவுண்டர், தருமையாதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர். சிவாகம வித்துவான். சிவஸ்ரீ, சுவாமிநாத சிவாசாரியார், சிரோமணி. திரு. இராஜ கோபால சாஸ்திரிகள், குருஞானசம்பந்தர், திருஞான சம்பந்தர், வெள்ளியம்பலவாணர், என்ற தலைப்புக்களில் பண்டாரசாத்திரக் கருத்துக்களை வெளியிட்டனர்.

திருவாரூர் இராஜன்கட்டளை வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள். இரவு 9 மணிக்குத் தருமையாதீன இசைப்புலவர். இசையரசு. திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது.

மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பொதுமக்கள் பலரும் குழுமியிருந்து கேட்டு இன்புற்றனர்.

ஆவணிமூல விழா :-

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்
வழங்கியருளிய

# ஆசியுரை

" ஆலந்தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்—பாலொளியாம்
மத்தனே கூடல் மதுராபுரி யுமையாள்
அத்தனே ஆலவா யா "

மெய்யன்பர்களே !

" நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினேன் காண் "

என்று அப்பரடிகள் இறைவனது தன்மையை வியந்தருளினார். நாம் அனைவரும் ஆண்டவனிடத்தில் அன்புகொண்டால் நம்மைச் சபை நடுவில் சிறப்படையும்படி ஆசாரியனாய் வந்தும் அருளுவான். இறைவனிடத்தில் உண்மை அன்பும் உள்ளத் தூய்மையும் ஒவ்வொருவருக்கும் வேண்டும். அவைகளை உடைய வராய் இருந்ததினாலேயே 'அத்தனே ஆலவாயா' என்று போற்றினார் குருஞானசம்பந்தப்பெருமான். வெண்மை முத்தி தரும் நிறமாகலான் இறைவனை அவர் 'பாலொளியாம் மத்தனே' எனச் சிறப்பிக்கலானார். இத்தகு பாடல்களை உரை காண முற்பட்டால் நாத்தடுமாறும். திருவாலவாய் இறைவனை அப்பரடி கள் ' முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி ' (திருமுறை 6 : 190) எனப் பாடினார். இதனை உட்கொண்டே 'மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்' என்றருளுவாராயினார் குருஞான சம்பந்தர். சொக்கநாதவெண்பா அப்பெரியார் திருவாய் மலர்ந்தருளியதாகும். அந்நூல் சொக்கலிங்கப் பெருமானிடத்து நம்மைச் செலுத்தும்.

---

*18—8—64 செவ்வாய்க்கிழமையன்று நிகழ்ந்த ஆவணிமூல விழாவில், சென்னை, திருக்கோயில் ஆசிரியர் திரு. N. R. முருகவேள் M. A., M. O. L., அவர்களுக்குச் " சித்தாந்தப்புலவர் மணி ' என்ற பட்டம் வழங்கியபோது அருளியது.*

ஆலவாய்ப்பெருமான் ஞானசம்பந்தப்பெருமானை பாலைக் கொடுத்து ஆண்டான். நாவரசரை சூலை கொடுத்து ஆண்டான். சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஓலைகாட்டித் தடுத்தாட்கொண்டான். ஆனால் மணிவாசகப்பெருமானுக்காகத் தானே பிரம்படிபட்டு அவரை ஆட்கொண்டான். சொக்கலிங்கப்பெருமான் நாமெல்லாம் உய்ய தான் மொத்துண்டு நமக்கெல்லாம் அருளினான்.

'அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யும் அன்னையவள் தரும்பிட்டுப் பிட்டுண்ட' இறைவனது திருநாள் இன்று. உலகத்தில் நாம் உழைத்தல் வேண்டும். நமக்குப் பெரியவர்கள் அறிவுறுத்திய உழைத்து உண்ண வேண்டுமென்ற அறிவுரையை மெய்ப்பிப்பதே இறைவனது பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் ஆகும், எந்த நாட்டில் உண்மையும், கடமையும் சரிவர உண்டோ அந்த நாடே முன்னேறும். இதை இத்திருவிளையாடலால் உணர்த்திய இறைவனிடத்தில் நமக்கு அன்புவேண்டும். இறைவனிடத்தில் அன்பு இருந்தால்தான் உயிர்களிடத்திலும் அன்பு தோன்றும். இதனையே சிவஞான சித்தியார், 'ஈசனுக் கன்பிலார் அடியவர்க்கன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பிலார் தமக்கும் அன்பிலார்' எனச் செப்புகிறது.

இறைவனிடத்தில் அன்பைச் செலுத்துதல் ஆசாரியரிடத்து உபதேசம் பெற்று, அதனைச் சிந்தித்துத் தெளிந்தபின்பே உண்டாகும். சிந்தனையில் சாத்திரம் கைகொடுத்து இறை அன்பினை நிலைக்கச்செய்யும் இறையன்பு காரணமாக எல்லா உயிர்களிடத்திலும் அன்புகொண்டு தொண்டு செய்யும் நிலைவாய்க்கும். ஆகவே, சமயம் வாழ்ந்தால்தான் சமுதாயமும் வாழும். அந்த உண்மையைத்தான் இன்று வெளியிட்ட இராசமாணிக்கனாரின் சைவசமய வளர்ச்சி என்ற நூல் நமக்கு விளக்குகிறது. தொண்டால் உயர்ந்தது நம்நாடு, அதன்கண் உழைப்பால் உயர்ந்ததுதான் நம் வில்வாரண்யமாகிய தருமபுரம்.

இத் தருமபுரத்தில் நிகழும் ஆவணிமூல நன்னாளில் பட்டம் பெறுபவர் ஒரு பேரறிஞர் ஆவார். அறிவிற் சிறந்த பெரியார் ஒருவர் இவரைத் தன் வாரிசெனக் கூறிக்கொண்டார். அத்தகு இளைஞர் 'சித்தாந்தப் புலவர்மணி' என்ற பட்டத்தைப் பெறுகிறார் இன்று. இப் பட்டத்தைச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் பெறுகிறார் அவர். அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா ?

அறிவுக்கு எப்போதாவது விழிப்பு உண்டாதல் உறுதி. அப்போதுதான் எந்த அடிப்படையும் விளங்கும். ஒவ்வொரு வரும் உலகியலின் அடிப்படையை உணர முயலவேண்டும். சிறப்பாக மாணவர்கள் எதையும் குறிக்கோள் வழிநின்று அறிய வேண்டும். முருகவேள் நல்ல திருக்குறள் சொல்லவல்ல ஆசிரியர். செம்மையான திருவருள் தொண்டர். தானே விரும்பாது இப்பட்டத்தை இயல்பாகப் பெறுகிறார். அப்பட்டத் தையும் இத் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் பெறுவதில் ஒரு சிறப்பு உண்டு. அவரைப் பாராட்டி இராசமாணிக்கனார் பேசவிருக்கிறார்கள். பட்டம் பெறுகின்ற இளைஞரும், அவரைப் பாராட்டுகின்ற அறிஞரும் இவ்விழாவைச் சிறப்பிக்க வந்துள்ள அனைவரும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் எல்லா நலன் களும் எய்தி நீடு வாழ்க.

"சித்தாந்தப் புலவர்மணி" என்ற பட்டம்பெற்ற திருக் கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம்.ஓ.எல்., அவர்களை டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார், எம். ஏ., பி.எச். டி., அவர்கள் பாராட்டிய பாராட்டுரை.

"ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருவருளுக்கு என் பணிவான வணக்கம் உரித்தாகுக! ஏனையோர்க்கும் என் வணக்கம்!

கண்ணுக்கினிய ஒரு காட்சியினை இங்கே நாம் காண்கிறோம். முடிமன்னர்களில்லாத இக்காலத்தில் இறைவனின் பிரதிநிதியாக எழுந்தருளி சமயம் வளர்க்கும் சந்நிதானம் அவர்களது புலவர்களைப் பாராட்டும் பண்பு நினைந்து நினைந்து மகிழத்தக்க தாகும். தமிழகத்தின் வேறு எந்தப் பகுதியிலும், எங்கு தேடி னும் காணுதற்கரிய தொன்றாகும் இது. அரசர்கள் விட்டுச் சென்ற பணிகளை ஆதீனங்கள் நிறைவேற்றுகின்றன. அவை இயற்றும் அரும்பணிகள் தமிழ்த்துறைபுக்க எம்மனோராலேயே அறிய முடியும். குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டம் வழங்கிப் பாராட்டுவது பின் வருவோர்க்கு ஓர் ஊக்கந்தர வல்ல தாகும். இவர்கள் செய்கை, தமிழ்காக்கும் ஒரு புது சமுதா யத்தை உருவாக்கத் துணைசெய்யும்.

புலவர்களைப் பாராட்டும் பண்பிலே அவர்கள் தேர்ந்து செய்கிறார்கள். தமிழ்த் தலைமணிகளை எல்லாம் பட்டமளித்துப் பாராட்டுகிறது தருமையாதீனம். பட்டம் பெறுபவர்களும்

சாதாரணமானவர்களல்லர்; பெயரும் புகழும்பெற்ற பேரறிஞர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தம் சமயநுண்ணறிவினாலும், கல்விப் பெருக்கத்தாலும் பட்டம் பெறற்குரியாரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சற்று முன்பு அவர்கள் பேசிய பேச்சில் தான் எத்துணை எத்துணை மேற்கோள்கள்!

இன்று பட்டம்பெற்ற திரு. முருகவேள் அவர்கள் இளைஞராயினும், சேக்கிழார் அருளியதுபோல் "சிறிய பெருந்தகையாராவார்கள். அவர் சைவ சித்தாந்தத்தில் பெரும்புலமை பெற்றவர். அவரது பேச்சாலும், எழுத்தாலும் சைவ சித்தாந்தம் எளிதாக மக்களுக்குப் புரிய ஆரம்பித்தது. கட்புலனால் அறியத் தக்கதன்று சைவசித்தாந்தம்; அறிவால் அறிய வல்லதாகும். அத்தகு ஒன்றை எளிதில் அறிவுறுத்தவல்லவர் முருகவேள். அதற்குக் காரணம் அதனை அவர் நன்கு உணர்ந்திருப்பதே ஆகும்.

திரு. முருகவேள் பலபட்டங்களைப் பெற்றவர். சைவ சித்தாந்த மகாசமாஜம்ளித்த 'சைவப் புலவர்' என்ற பட்டத்தை அவர் 1944-ல் பெற்றார். 1945-ல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத்தேர்வில் வெற்றிபெற்றார். 1947-ல் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் முதல்வகுப்பில் தேர்ச்சியுற்றார். பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம். ஓ. ல். பட்டம் பெற்றார். அடுத்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ.. பட்டம் பெறலாயினர். சிறிது காலம் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ்த்தொண்டு செய்த அவர் அடுத்து சென்னை கிருத்துவக் கல்லூரியில் சிறிதுகாலம் பணியாற்றினர். பின்னர் எவ்விதமான முயற்சியுமின்றிச் சென்னை அரசாங்க அறநிலையத்துறையினர் நடத்தும் திங்கள் இதழான திருக்கோயிலுக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டு அப்பணியைத் தற்போது புரிந்து வருகிறார். இரண்டாண்டுகளாக அப்பணியைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறார்.

'திருக்கோயில்' இதழில் முதலாண்டில் மட்டும் நாற்பத்திரண்டு சமயக் கட்டுரைகள் வரைந்துள்ளார். அடுத்த ஆண்டு நாற்பது கட்டுரைகள் வரைந்துள்ளார். சமயக்கட்டுரை வளர்வது சுலபமானதன்று. பண்டர்க்கர் கட்டுரைகளைப்போல் இவர் கட்டுரைகள் தொடராக வரவேண்டும். இதனைச்செய்ய வேண்டுவது அறிஞர்களது பொறுப்பாகும்.

ஒருவர்க்கு வாழ்க்கையில் எழுத்து. பேச்சு, பாடஞ் சொல்வது போன்ற திறமைகள் ஒருங்கமைவது அரிது. இப்புலமைகளை எல்லாம் ஒருங்கு கைவரப்பெற்ற முருகவேள் இலக்கிய சமயச் சொற்பொழிவுகளிலும் வல்லவர்; சமயபாட வகுப்பு நடத்தும் நுண்ணுணர்வினர். சைவ சித்தாந்த சமாஜத்தின் சார்பில் நெடுநாள் அவர் சிவஞான சித்தியார் சாத்திர வகுப்புக்கள் நடத்தினர்.

திரு. முருகவேள் சிறந்த நூலாசிரியரும் ஆவார். 'தருக்கவியல் விளக்கம்' என்ற அவரது நூல் அவரது தருக்க நூல் வன்மைக்குச் சான்றும். இலக்கணத்தில் கற்பனைகள் என்ற அவரது பிறிதோர் நூல் நயமானது. இலக்கண. இலக்கிய, வரலாற்றுச் - சமயத் துறைகளுள் வல்லவராக விளங்குகிருர் இவர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முருகவேள் அவர்களைப் பட்டத்துக்குரியவராகத் தேர்ந்தெடுத்தது குறித்து என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நண்பர் நெடிதுவாழ வாழ்த்தி அமைகிறேன்; வணக்கம்.

"சித்தாந்தப் புலவர் மணி" என்ற பட்டம்பெற்ற திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் M.A., M.O.L. அவர்கள் ஆற்றிய நன்றியுரை.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருவடிகளை வணங்குகிறேன். பெரியோர்களே! நண்பர்களே!

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இந்நாளை நன்னுள் என்று குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரை என் வாழ்நாளில் மகிழ்ந்து போற்றத்தக்க சிறந்தநாள் இது. இறைவனது பேரருள் திறனை விளக்கவல்ல நல்ல விழா ஆவணிமூல விழா! இந்நன்னுளில்தான் இறைவன் அடிப்படைத் தத்துவமாகிய மண்ணைச் சுமந்தான். நாதத்திற்கு அப்பாற்பட்ட இறைவன் பிருதுவியைச் சுமந்தான்; கூலியாளாக வந்தான். எனவே இறைவனது சௌலப்பியத்தை விளக்கவல்லவிழா ஆவணிமூல விழா; இவ்விழாவில் புலவர்களுக்குப் பட்டங்களை வழங்குதல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் பெருங்கருணைத் திறத்திற்கு இதுசான்ருக விளங்குகிறது.

குருமணியவர்கள் என்னையும் ஒரு பொருளாகக் கருதி பாராட்டியதை நினைக்கும்போது, திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான்.

" கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்க மாடாமோ "
(திருவா : தோணோ - 4)

என்றருளிச்செய்த மணிமொழியே என் உள்ளத்தில் மேலோங்கி நிற்கிறது. மற்றோரிடத்தில் ' நகவே தகும் எம்பிரான்என்னை நீ செய்த நாடகமே' என்றார் அடிகள். எனக்கும் இது ஒரு நாடக மாகவே தோன்றுகிறது.

தருமையாதீனத்துக் குருவருள்பெற்ற குமரகுருபர அடிகள் பண்டார மும்மணிக்கோவையில் தருமையின் பெருமையைக் கூறுமிடத்து

" ஊரிற் குறுகினேன் ஒருமாத் திரையளவுஎன்
பேரிற் குறுகினேன் "

என்றருளினார். சிவனாகப் புகுந்த அவர் சிவனாகமாறினாராம். தருமைக்குள் புகுந்த எனக்கோ பெயர் மிக நீண்ட தன்மையைக் காணுகிறேன்.

' தமிழறிவுபெற்ற காலம் முதற்கொண்டே சமய அறநிலையங் களோடு தொடர்புகொண்டேன். தருமைத் திருமடத்தோடு நான் 15 ஆண்டுகளாகத் தொடர்புகொண்டுள்ளேன். தருமபுர ஆதீனத்தின் சைவ சமயத் தொண்டை யான் சொற்பொழி வாற்றும் ஒவ்வோரிடத்தும் கூறத்தவறியதில்லை. ஆதீனத் தொடர்பாலேயே என் தமிழறிவு சிறந்தது; உலகம் என்னை அறிந்தது. குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாலும். சென்னை அறநிலைய ஆணையர் அவர்களது அன்பாலும் இன்று திருக்கோயில் ஆசிரியனாகப் பணியாற்றுகிறேன். சென்னைச் சுவாமிகளது பேரருட்கு என்றும் கடப்பாடுடையேன்.

கயிலைகண்ட குருமணியவர்களின் கனகாபிஷேக விழாவி லேயே சந்நிதானம் அவர்களது பேரருட்டிறனை வியந்து சிலபாடல்களைப் பாடியுள்ளேன். அவைகளை மீண்டும்பாடி அவர்கள் திருவடிகளுக்கு என் வணக்கங்களைச் செலுத்திக் கொள்ளுகிறேன். (அப்பாடல்களைப் பாடினார்கள்).

# பணிவியல் நன்றியுரை

[தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள், ஆவணிமூல விழாவில், " சித்தாந்தப் புலவர்மணி ' என்னும் பட்டம் வழங்கி ஆசியுரை அருளிய போது, ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவினைத் தழுவி இயற்றியது.]

(அறுசீர் விருத்தம்)

அருமை பலவும் வாய்ந்தொளிரும்
ஆன்ற தமிழும் சிவநெறியும்
பெருமை பிறங்கத் தொண்டுகள்தாம்
பேணிச் செய்து போற்றிவரும்
உரிமை யுடைய பெருஞ்சிறப்பின்
ஓங்கி உயர்ந்து திகழுவது
தரும புரநல் ஆதீனம் !
அதன்றன் புகழ்தான் சாற்றரிதால் ! 1

நானூ றாண்டு களுக்குமுனர்
நல்ல குருஞா னசம்பந்தர்
ஆனே றண்ணல் அருள்நெறிதான்
அகில மெங்கும் தழைத்தோங்கித்
தேனோர் நம்செந் தமிழ்மொழியும்
சிறந்தே ஓங்கிச் செழித்தொளிரத்
தானோர் தனக்கே எனக்கண்ட
தாகும் தருமை ஆதீனம் ! 2

அனைய சிறப்பின் ஆதீனத்
தருள்சேர் குரவர் பலருள்ளும்
இனிய இருபத் தைந்தாக
எண்ணும் முறையில் எழுந்தருளித்
துனியின் றரசு செலுத்துமுயர்
சுப்ர மண்ய தேசிகர்தம்
நனிநன் றுயர்ந்த அருளாட்சி
நலங்கள் அனைத்தும் நவிலரிதால் ! 3

காட்சிக் கெளியர் ! கவின்வடிவர் !
கலைஞர்ப் போற்றும் பெருந்தலைவர் !
ஆட்சித் திறனும் அறிவாற்றல்
அருளே முதலாம் பலவாய
மாட்சி எலாமும் ஒருங்கமைந்த
மாதவத்தர் ! மனநலத்தர் !
சேட்சி மிகுசீர்ச் சுப்ரமண்ய
தேசிகர் தம்சிறப் பென்சொல்கேம் ? 4


புகழின் மிகுநற் சுப்ரமண்யப்
புனித குரவர் ஆட்சியின்கீழ்த்
திகழும் சிறந்த திருக்கோயில்
இருபத் தேழும் செம்மைமிக
நிகழும் முறையும், மற்றவற்றின்
தூய்மை நிலையும், திருப்பணிகள்
தகநன் றியற்றும் சால்புமெலாம்,
தகவோர் பலரும் புகழ்வனவாம் ! 5

நல்லார் நங்கள் சுப்ரமண்ய
நலஞ்சேர் தேசி கனூர்அருளே,
வல்லார் வியப்பத் திருக்குறள்நல்
உரையின் வளமும், மாண்பமைந்து
பல்லார் புகழத் திருமுறைநூற்
பதிப்பும் பிறவும் அளித்த(து) ! அவர்
எல்லா வகைநற் றிருப்பணியும்
எண்ணி யுரைத்தல் இயல்வதொன்றோ ? 6

துன்னு புகழ்சேர் சுப்ரமண்யத்
தூய சிறந்த தேசிகர்தாம்
சென்னை நகரில் சமயநெறி
பரப்பும் சிறந்த நிலையமொன்றை
முன்னி அமைத்தும், தூயநல்ல
முனிவர் ஒருவர் தமைஉய்த்தும்,
மன்னும் இந்நாள் தமிழ்சமயம்
வளர்க்கும் மாண்பு பெருஞ்சிறப்பாம் ! 7

தூய நல்ல எங்கள்'சென்னைச்
சுவாமி' சோம சுந்தரர்தாம்,
நேயம் மிகவே எங்களொடு
நேர்ந்து பழகி, எமக்கெல்லாம்


நெல்லையில், தருமையாதீனம்
6 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்ததேசிக சுவாமிகள்
ஆலய மகாகும்பாபிஷேகவிழாவில்:



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் சபாநாயகர் கனம், S. செல்லபாண்டியன்
B. A., B. L. அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தல்




சிவஞானபுரம் (தென்னை அபிவிருத்தி)



எருக்கந்துறை (தென்னை அபிவிருத்தி)

திருச்செந்தூரில்




தருமையாதீனத் திருமடத்தின் தோற்றம்

பாபநாசத்தில்



தருமையாதீனத் திருமடத்தின் தோற்றம்

நெல்லையில் தருமையாதீனம் 6 ஆவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்ததேசிகசுவாமிகள் ஆலய
மகாகும்பாபிஷேக விழாவில்:



யாகசாலையிலிருந்து கடம் புறப்பாடாகி வலமாகவருதல்.

தாயின் நிலையிற் பரிவுமிகச்
சைவம் தமிழைத் தகவுணர்த்த
மாஇன் னருள்தான் புரிந்தருளும்
மகாசந் நிதானம்! அருள்பெரிதே! 8

பயிலும் இனிய பெருநலங்கள்
பலவும் அமைந்து, தமிழ்சமயம்
செயலின் வளர்க்கும் சுப்ரமண்ய
தேசிக ஸ்வாமி கள்அவர்கள்,
இயல்பின் எவரும் தமக்குமுனர்
இருந்த குரவர் காணகிலாக்
கயிலை வரையின் காட்சியினைக்
கண்டு வந்த மாட்சிநன்றே! 9

கற்றோர் மற்றோர் கவிஞரெலாம்
கனிந்து பரவும் கயிலையினை
எற்றோ பலவாம் இன்னலெலாம்
இனிதே கடந்து சென்றுடலோ(டு)
உற்றே கண்டு பணிந்துவந்த
உயர்வாற் கயிலைக் குருமணியாம்
பொற்பேர் கொள்மாசந் நிதானத்தின்
புகழ்ச்சீர் பரவிப் போற்றல்நன்றே! 10

முன்னாள் நந்தம் அப்பர்பிரான்
முன்னிக் கண்ட கயிலையினைப்
பின்னாள் போந்த நம்சமயப்
பெரியோர் பலர்தாம் கண்டிலரால்!
இந்நாள் அதனைச் சென்றுகண்டிங்
கினிது போந்த குருமணியின்
தன்னே ரில்லாப் பெருஞ்சிறப்பின்
தகைமை, நம்மால் அளப்பரிதே! 11

தளியின் நிகழும் விழாக்கள்பல
தம்முள், இறைவன் அருள்நலத்தை
ஒளியின் உணர்த்தும் ஆவணிநன்
மூல விழாவில், அருட்குரவ!
எளியன் றனக்கும் 'சித்தாந்தப்
புலவர் மணி'என் றொருசிறப்பை
அளியின் அளித்தாய்! பெரும! நுமக்(கு)
அளவில் வணக்கம், நன்றிசொல்கேன்! 12

சான்றோர் குமர குருபரர்தாம்
"கமலை சார்ந்தேன் பேர்குறுகி
வான்றோய் சிவமாய் வயங்கிநின்றேன்"
எனமொ ழிந்தார் ! நின்மலர்த்தாள்
யான்றான் சேர்ந்து பெயர்நீண்டேன் !
எங்கள் கயிலைக் குருமணியாம்
தோன்றல் ! நின்றன் அருளியல்பைத்
துதித்துப் போற்றி வணங்குகின்றேன் ! 13

"புகவே தகேன் நின் அன்பருள்யான் !
புனித மணியே ! எனை ஆண்டாய் !
தகவே ? நின்றன் பெருங்கருணை
சற்றே எனினும், உளம்உருகும் !
நகவே தகும்நீ எனைச்செய்த
நாடகந்தான் !" என்னுமுரை
மிகவே எனக்கும் பொருந்தவைத்தாய் !
வியந்து பணிந்து நன்றிசொல்கேன் ! 14

( வெண்பா )

வாழி கயிலைக் குருமணிதாள் ! மற்றதன்சீர் !
வாழிகுரு ஞானசம்பந் தர்மலர்த்தாள் !—வாழியரோ
நந்தருமை ஆதீனம் ! நற்சைவ சித்தாந்தம் !
செந்தமிழ்போல் மேன்மேற் செழித்து. 15

73, கொத்தவால்
சாவடித்தெரு
சைதாப்பேட்டை
சென்னை 15.

இங்ஙனம்,
அன்பும் பணிவும்மிக்க
ந. ரா. முருகவேள்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

திருக்கடையூர் கோயில் தமிழ் நாட்டின் புராதன க்ஷேத்திரம். அதைத் தரிசிப்பதில் ஆத்ம சாந்தியும் மன நிறைவும் ஏற்படுகிறது. கோயில் சுத்தமாகவும் நியதியுடனும் வைக்கப்பட்டிருப்பதைக்கண்டு மகிழ்ச்சி. வேதபாராயணம் செய்பவரும் ஓதுவாரும் வெகு சிறப்பாக அர்ச்சனைக் காலத்தில் ஓதுவது மனதுக்கு ரம்மியமாக இருந்தது. நல்ல முறையில் கோயில் நிர்வகிக்கப்படுவதைக் கண்டு சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒம்) ஆர். வெங்கட்டராமன்,
18—8—64. (Minister for labour, Govt. of Madras.)

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 23, இதழ் 9, பக்கம் 510 இன் தொடர்ச்சி )

ஆசிரியர் : இது, பலர்க்கும் ஐயம் விளைப்பதொன்றே. ஆயினும், மரத்திற்குக் காரணம் விதை ; விதைக்குக் காரணம் மரம் ; ஆதலின், இவ்விரண்டில் ஒன்று இல்லாதபொழுது மற்றொன்று இல்லை என்பது தெளிவு. ஆனால், 'இவை எப்படி உண்டாயின ?' என்னும் வினாவிற்கு விடை ஒருவராலும் அறியக் கூடியதாய் இல்லை. ஆயினும், வித்திலிருந்து மரமும், மரத்தி லிருந்து வித்தும் தோன்றி வருதல் கண்கூடு. 'இரண்டில் இன்னதுதான் முதல்' என்று உறுதிப்படுத்துதற்குத் தக்க சான்று இல்லை என்பது உண்மைதான் ; ஆனால் அதுபற்றி நாம், 'வித்தினால் மரமும், மரத்தினால் வித்தும் உண்டாகின்றன' என்ற உண்மையை மறுக்கமுடியாது. முடியாமையால், 'வித்தோ - மரமோ, ஏதோ ஒன்று எவ்வகையிலோ முதலில் தோன்றியிருத்தல் வேண்டும் ; அதன்பின், ஒன்றிலிருந்து ஒன்று காரண காரியத் தொடர்ச்சியாய் வருகின்றது' என்று தான் முடிக்க வேண்டியுள்ளது. அதுபோலவேதான், 'வினை யும், உடம்பும்' ஆகிய இரண்டில், 'இன்னது முதல் என்பதை உறுதிப்படுத்த முடியாவிடினும், 'இரண்டில் ஒன்று எவ்வகை யிலோ முதலில் தோன்றியிருத்தல் வேண்டும்' என்றும், அதன் பின் அவை காரண காரியத்தொடர்ச்சியாய் ஒன்றால் மற்றொன்று தோன்றித் தொடர்ந்து வருகின்றன என்ற முடிவுக்கு வருதல் வேண்டும்.

மாணாக்கன் : அடிகள் காட்டிய முறை நேர்மையானதே ; எனினும் ; வித்தேயாயினும், மரமேயாயினும் தம்முள் காரண காரியங்களேயன்றி, பஞ்சபூதங்களை நோக்க அவை இரண்டும் அவற்றின் காரியங்களே. ஆதலின், அவை இரண்டிற்கும் முற்பட்டனவாய்ப் பஞ்ச பூதங்கள் இருத்தலின், அவற்றிலிருந்து வித்தோ அல்லது மரமோ தோன்றிப் பின்பு வித்தும் மரமும் காரண காரியத் தொடர்ச்சியாய் வருகின்றன. ஆனால், உடம்பு,

மாயை; வினை, கன்மம் இவை இரண்டுக்கும் பொதுவான காரணமாய் வேறொருபொருள் இருப்பின், அதிலிருந்து முதலில் உடம்போ அல்லது வினையோ தோன்றிப் பின்பு ஒன்றிலிருந்து மற்றொன்று தொடர்ச்சியாய் வருதல் கூடும். அத்தகைய மூன்றாவது பொருள் யாது உளது ?

ஆசிரியர் : இஃது இன்றியமையாததொரு வினாவே ; ஆயினும், இதற்குப் பிற சமயங்களில் விடை காணுதல் அரிது ; சைவ சித்தாந்தத்தில் இதற்கு விடை எளிதில் காணலாம். ஏனெனில், பிற சமயங்கள் உயிர்கட்கு உள்ள குற்றம், 'மாயை, கன்மம்' என்ற இரண்டே என்று கூறுகின்றன. அதனால், அவை இரண்டிற்கும் பொதுக் காரணமாய் மூன்றாவது ஒரு பொருளை அவைகளிற் காணுதல் இயலாது. மூன்றாவது குற்றத்தை உணராமையால் மேலும் பல இடர்ப்பாடுகள் உண்டாகின்றன. அவை, மாயையேயாக வினையேயாக ; இரண்டில் ஏதோ ஒன்று முதலில் உயிரை வந்து பற்றியதாக வைத்துக்கொண்டாலும், 'அஃது ஏன் வந்து பற்றிற்று ? என்ற வினா எழும். 'காரணம் இன்றியே வந்து பற்றிற்று' என்று விடை கூறினால், முத்தியடைந்த பின்பும் அவ்வாறு அஃது ஏன் வந்து பற்றக்கூடாது என்ற வினா உடனே தோன்றும்.

சைவ சித்தாந்தம், உயிர் முதலில் தூய்மையாய் இருக்க அதனை மாயையோ அல்லது வினையோ வந்து பற்றியதாகக் கூறவில்லை. 'செம்பு, இயற்கையிலே, 'களிம்பு' என்ற ஒரு குற்றத்தை உடையதாய் இருத்தல்போல, ஆன்மா இயற்கையிலே, 'ஆணவம்' என்ற ஒரு குற்றத்தை உடையதாய் அக் குற்றம் காரணமாகவே 'வினை மாயை, என்னுங் குற்றங்கள் அதனை வந்து பற்றின' என்று கூறுகின்றது. அதனால், 'வினை, மாயை' என்பவற்றிற்கு முன்னே ஆணவம் என்ற வேறொன்று இருத்தலால், அதுகாரணமாக மாயையோ அல்லது வினையோ ஏதோ ஒன்று முதலில் வந்து உயிரைப் பற்றியது எனக் கொள்ளுதல் எளிதாகின்றது.

மாணுக்கன் : ஆம் ! சைவ சித்தாந்தத்தில். உயிருக்கு, 'ஆணவம்' என்ற ஒரு முதற் குற்றம் சொல்லப்படுவதால், அது காரணமாகப் பின்பு எல்லாக் குற்றங்களும் வந்துசேர்ந்தன என்பது பெறப்படுகின்றது. ஆயினும், 'மாயை, வினை' என்னும் இரண்டில் ஏதோ ஒன்று முதலில் வந்தது எனப் பொதுவாகக் கூறுதல் அன்றி, இன்னதுதான் முதலில் வந்தது எனச் சிறப்பாகக் கூறுதல் இல்லையோ ?

ஆசிரியர் : உண்டு; 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும்மலங்களால் உயிர் அடைவது, உலகப் பொருள்களால் வரும் இன்பத் துன்பங்களில் அழுந்துதலேயாகும். உயிர் அவ்வாறு அவ்வின்பத் துன்பங்களில் அழுந்துதற்குக் காரணம், அதற்கு அவற்றின்மேல் உள்ள விருப்பு வெறுப்புக்களே, இவ்விருப்பு வெறுப்புக்கள் ஆணவ மலத்தின் செயல்களேயாம். உயிர்களால் விரும்பவும் வெறுக்கவும் படுகின்ற இன்பத் துன்பங்களை விளைப்பது வினையாகிய கன்ம மலமே. ஆதலின், ஆணவ மலத்தால் விருப்பு வெறுப்புகளை உடையதாய் நிற்கும் உயிர், அவ்விருப்பு வெறுப்புக்களுக்கு விடயமாகிய இன்பத்துன்பங்களைத் தருகின்ற கன்ம மலத்தோடுதான் முதற்கண் தொடர்வதாகின்றது. எனவே, 'கன்மம், மாயை' என்னும் இரண்டில் கன்மமே முதற்கண் ஆன்மாவைப் பற்றுவதாம் என்க. இதனால், ஆணவத்தின் காரியம் கன்மமும், கன்மத்தின் காரியம் மாயையும் ஆதல் விளங்கும். கன்மம் ஆணவத்தின் காரியமேயன்றி மாயையின் காரியம் அன்று என்பதை, "இருள்சேர் இருவினை" எனத் திருவள்ளுவருங் குறித்தருளினார்.

இன்பத் துன்பங்களுக்கு விதைபோல்வது கன்மமலம். அவ்விதை முளைத்து வேரூன்றி வளர்ந்து, மற்றும் பல விதைகளைத் தருவதற்குச் சார்பாய் உள்ள நிலத்தின் ஆற்றல் போல்வது ஆணவ மலம். அவ்வாற்றலை உடைய நிலம் போல்வது ஆன்மா. விதையை முளைப்பித்து, நிலத்தின் ஆற்றலையும் வெளிப்படுத்தி முளையை நிலத்தோடு இயைவிக்கும் நீர் போல்வது மாயாமலம். முதலில் நிலமும், பின்னர் அதன் ஆற்றலும் வேண்டப்படும். அதன்பின் வேண்டப்படுவது விதை. அவையெல்லாம் அமைந்தபின் வேண்டப்படுவதே நீர். இவைபோலவே, 'ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை' என்பவற்றையும் வைத்துக் கண்டுகொள்க. இவ்வாறாயினும், இவற்றின் செயற்பாடுகளுக்கு முன் பின் கூறுதல் அரிதாகலின், இவை அனைத்தையும் 'அநாதி' எனக் கூறுதலே சைவ சித்தாந்தத்தின் மரபு.

உயிர்கள்தோறும் ஆணவமலப் பிணிப்பு ஒருவகையாய் இல்லாமல் பல்வேறு வகையாய் இருத்தலின், அவற்றின் விருப்பு வெறுப்புக்களும் பல்வேறு வகையாம். ஆகவே, அவற்றிற்கேற்ப வரும் வினைகளும் பல்வேறு வகையே. அவ்வகைகளுக்கேற்பவே உடம்புகளும் பல்வகையினவாய் வரும். இவை அனைத்தையும் அறிந்து அவ்வவற்றிற்கு ஏற்றவாறு இறைவன் கூட்டுவிக்கின்றான் என்க. (தொடரும்)

# திருமுகம் படும்பாடு

வித்துவான். திருமதி. ப. நீலா

பெண்ணைப் பெற்ற தந்தைமார் பெருமையுடன் பீடுநடை நடக்கலாம். மணம் பேச வருகிறவர்களிடம் தலைகுனிந்து கைகட்டி ஒடுங்கி நிற்கும் அவலநிலை வேண்டாம். போர் தீவிரமாக நடக்குங்கால் பெண்கேட்டு வரவிடுப்பான் மாற்றான். பெண் கொள்ளும் முறையினால் சில சமயம் போர் நிறுத்தம் ஏற்பட்டு சமரசமும் நிகழ இடம் ஏற்படும். மன்னன் மகளை மணவினை செய்து கொள்ளும் எண்ண முடையவன் முன்பாகத் தூது விடுத்து இசைவை அறிந்து கொள்வான். திருமுகம் கொண்டு வரும் தூதர் பெண்ணைப்பெற்ற பெருந்தகையாளர்களிடம் படும் பாடுதான் இலக்கிய உணர்வோடு "மறம்" என்ற உறுப்பில் பாடப்படுகிறது.

கலம்பகம் என்ற நூலில் உள்ள பலவேறு உறுப்புகளில் "மறம்" என்பதும் ஒன்று. இனி உறுப்பின் பெயர் செய்தியோடு எவ்வாறு தொடர்பு பெற்றிருக்கிறது என்பதைக் காண்போம். கலம்பக உறுப்பிற்கு ஆதாரமாகப் புறப்பொருள் வெண்பா மாலையில் "மகட்பாற் காஞ்சி" "மகள் மறுத்து மொழிதல்" போன்ற துறைகள் உள்ளன. வெம்முரணோன் மகள் வேண்டித் தூதனுப்ப - மதிலுக்குரிய மறமன்னன் அதனை மறுத்துக் கூறுதல் மகள் மறுத்து மொழிதல் என்ற துறையாகும்.

"ஒள்வாள் மறவர் உருத்தெழுந் தும்பர்நாள்
கள்வார் நறுங்கோதை காரணமாக் – கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால்"

தேனொழுகும் மாலையணிந்து வந்த மறவர்களுடன் தன்-பெண்ணின் காரணமாக உருத்தெழுந்து வந்த மறவர்களுடன் போரிட்டு, அவர்களின் யானைகளைக் கொன்று அவற்றின் தந்தத்தைக் கட்டில் கால்களாக மாற்றியுள்ளான் நொச்சி மன்னன். ஆகவே யார் பெண்கேட்டு வந்தாலும் பேசாமல் கருங்கண்ணியின் வெண்கட்டிற் காலைக் காட்டியே மகள் மறுக்கிறான் என்று நயம் படக் கூறுகிறார். இந்தத் துறைப் பொருளே பின்பு மறமாக உருவெடுத்து இன்று நமக்கு விருந்தாக அமைகிறது.

## மாடமலி கூடலிலே ஒரு காட்சி :

(மதுரைக் கலம்பகம்)

மணச் செய்தி எழுதிய திருமுகத்தைக் கையில் கொண்டு துடைநடுங்க நிற்கிறுன் தூதன் ஒருவன்.

சவுந்திரபாண்டியர் குடிப்பிறந்த எங்கள் முன் நிற்கமாட்டாமல் ஒருகோடி மன்னர் சமரில் பட்டொழிந்தனரே! அவருள் பிழைத்தோடிய ஒருவனு உன்னை இங்கு அனுப்பியுள்ளான். உன்னை விடுத்தவன் யார்? சுருண்ட கூந்தல்கொண்ட என்மகளை வேட்பதற்காக மணம்பேசி வரவிட்ட வார்த்தை எல்லாம் சொன்னுய். திருமுகத்தையும் யாம் காணக் கொணர்ந்தாய். கண்டோம். இனி அவனது திருமுடியிலெழுத்து எப்படி இருக்கிறது என்பதை யாம் பார்க்க சிகையினேடும் அவன் முடியைக் கொண்டுவா என இடியொலிபோல் முழக்கமிட்டான் கொடியிடையாளைப் பெற்றவன்.

தருமுகத்து நிமிர்குடுமி மாடமலி கூடற்
சவுந்திர பாண்டியர் குடியாஞ் சமரிடையாற்ரு
தொருமுகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தார்
உனைவிடுத்த மன்னவன்யா ருரைத்திடுவாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மறக்கொடியை வேட்பான்
மணம்பேசி வரவிடுத்த வார்த்தையது சொன்னுய்
திருமுகத்தி லெழுத்திதுவேற் றிருமுடியி லெழுத்தும்
தேர்ந்தறியக் கொண்டுவா சிகையினெடுஞ் சென்றே.

என்ற இனிய பாடல் எண்ணுந்தோறும் இன்பந்தரும்.

அரசும் ஆளும் : திருவரங்கக்கலம்பக ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் நகைச்சுவையுடன் ஒருகாட்சி காட்டுகிருர்.

கொற்றவனது திருமுகம் கொணர்ந்துள்ளேன் என்றுன் வாயிலிடத்து வந்துள்ள தூதன். அவன் செய்தி சொன்ன விதமே மன்னனின் சினத்தைக் கிளறிவிட்டு விட்டது. கொற்றவனது திருமுகம் கொணர்ந்த தூதனே - குறையுடலுக்கோ மறவர்தம் கொம்பைக் கேட்டாய். திருமுகம் கையில் இருப்பதாகச் சொன்னவனிடம் - அங்கிருப்பது முகமற்ற முண்டம்தானே - என்ற ஏளனக் குறிப்புடன் அரசன் வார்த்தைகளை உதிர்க்கின்றுன். மற்றதுதான் திருமுகம் என்று சொன்னுல் அதனிடம் வாய், செவி, கண், மூக்கில்லையே! என்ற வேந்தனை நோக்கித்

தூதன் எங்கள் இளவரசுக்குப் பெண்தர இயலுமா என்பதைக் கேட்டுவரச்சொன்ஞர்கள் என்று உணர்த்திஞன்.

இதனைக்கேட்ட வேந்தன் மீசை முன்னிலும் அதிகமாகத் துடித்தது. அரசுக்குப் பெண்கொடுக்கும் வழக்கம் எங்கள் குடியில் இல்லை. உங்கள் மன்னன் பெற்றது ' இளஅரசு ' ஆஞல் அதற்கேற்கும் வண்ணம் ' ஆலின் ' கொம்பை மணம் முடிக்கச் சொல். பிறந்த இடந்திற்கேற்பவல்லவோ மணவினைக்கொள்ள வேண்டும். அதை உணராமல் அரசுக்கு ( மரத்திற்கு ) மணம் செய்ய என் அருமைமகளைக் கேட்கிருயே என்று வேந்தன் மகள்தர மறுத்தான்.

கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா
குறையுடலுக்கோ மறவர் கொம்பைக் கேட்டாய்
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலம் என்றறியாய் போலும்
மற்றதுதான் திருமுகமே யாஞலந்த
வாய் செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்
பெற்றவிள வரசாஞல் ஆலின் கொம்பைப்
பிறந்த குலத்துக் கேற்கப் பேசுவாயே.!

பெண்ணைப் பெற்றவன் எதற்குமஞ்சாமல் வீரம் கொப்பளித்தோட உதிர்க்கும் இவ்வார்த்தைகளை ' மறம் ' என்ற துறையில் வைத்துப்பாடி இருப்பது எத்துணைப் பொருத்த முடையது என்பதை அறிவுலகம் எண்ணிப்பார்த்து இன்பமடையட்டும்.

EXRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

I was indeed happy to day to have the Darshan of the deity. I am glad to state that the temple and the surroundings have been kept scruplously clean, and neat. I hope I will soon have an opportunity of coming here again with my family.

(Sd.) D. R. Sundaram,
31—8—64. Salt Commissioner to Govt. of India.

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 23, இதழ் 9, பக்கம் 519 இன் தொடர்ச்சி )

(ஆ) உயர்திணைக்குரிய குறிப்புவினை :

இதற்குரிய ஈறுகளைத் தொல்காப்பியர் விதந்து கூறாது இதுகாறும் கூறப்பட்ட தெரிநிலைவினைக்குரிய ஈறுகளே குறிப்பு வினைக்கும் ஈறாய்ப் பாலுணர்த்தும் என்பர். தெரிநிலைவினை ஈறுகளுள் குறிப்புவினைக்கும் ஏற்பன; அம், ஆம், எம், ஏம், அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்பன (18)

ஆறும் வேற்றுமைக்குரிய உடைமைப்பொருள், ஏழாம் வேற்றுமைக்குரிய நிலப்பொருள், ஒப்புப்பொருள், பண்பு என்னுமிவற்றை நிலக்களமாகக்கொண்டும் அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டும் வினைக்குறிப்பு வரும் (16, 17).

வினாப்பொருளையுணர்த்தும் யார் என்னும் குறிப்பு முற்று உயர்திணை மூன்றுபாலுக்கும் உரியதாம். நன்னூலாரும்,

" யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால் " (வினை-30)

எனக் கூறுதல் காண்க (13).

செய்யுளுள் ன், ள், ர், ய் என்பனவற்றை ஈறாகவுடைய வினைகளின் ஈற்றயலெழுத்து ஆகாரம் ஓகாரமாதலும் உடைத்து, இவ்வீறுகளையுடைய பெயர்களின் ஈற்றயலெழுத்தும் இங்ஙனமே ஆகாரம் ஓகாரமாகுமென பெயரியல் 41-ஆம் நூற்பாவில் கூறப்பட்டது. இவ்விரிடத்தும் கூறப்பட்டதைத் தொகுத்தே,

" பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆ ஓ ஆகலுஞ் செய்யுளுள் உரித்தே "
(பொதுவியல் - 2)

என நன்னூலாரும் கூறுவாராயினர் (14, 15).

## 4. அஃறிணை :

### (அ) அஃறிணைக்குரிய தெரிநிலை வினை :

இத்திணைக்குரிய ஈறுகளைக் கூறுங்கால் படர்க்கையிடத்திற்கு உரியனவற்றையே விதந்து கூறுகின்றார், தன்மை உயர் திணைக்கே உரியதாகலானும், முன்னிலை விரவுவினை யாதலானும் அவை ஈண்டுக் கூறப்படவில்லை.

(1) படர்க்கை யொருமை வினைமுற்று : து, று, என்ற இரண்டு ஈறுகளும் இதற்கு உரியவாம் (20).

(2) படர்க்கைப் பன்மை வினைமுற்று : அ, ஆ, வ ஆகிய மூன்று ஈறுகளும் இதற்கு உரியவாம் (19).

இவர் கூறிய மூன்று ஈறுகளுள் வகரத்தை அகரத்தின்கண் அடக்கி, ஆகாரம் எதிர்மறைக்கண் வரும் என்னும் உரைக் குறிப்பையும் சேர்த்து,

"அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்" (வினை - 10)

என நன்னூலாரும் கூறுமாறு காண்க.

இதுகாறும் கூறப்பட்ட து, று, அ, ஆ, வ ஆகிய ஐந்தும், குறிப்பு வினைக்கண்கூற இருக்கும் 'டு' ஒன்றும், ஆகிய ஆறும் அஃறிணைப் படர்க்கைக்குரிய வினைமுற்றுக்களாம். இங்ஙனம் தொகுத்துக்கூறுவதை 'விரிந்தது தொகுத்தல்' என்பர் நச்சினார்க்கினியர் (21). ( தொடரும் )

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 23, இதழ் 9, பக்கம் 531இன் தொடர்ச்சி )

ध्यायेदुत्तर कुण्डेतु विष्णुं च नीलसन्निभम् ।
एकवक्त्रं द्विनयनं किरीटमकुटान्वितम् ॥ 402

पीतांबरधरं देवं गदा चक्राब्ज धारिणम् ।
सर्वलक्षण संयुक्तं मुक्ताभरण भूषितम् ॥ 403

வடக்குத் திக்கிலுள்ள குண்டத்தில், நீலமான திருமேனியுடையவராய், ஒருமுகத்துடன் இரண்டு கண்களையுடையவராய்க் கிரீடமணிந்த மகுடத்தையுடையவராய், பீதாம்பர மணிந்தவராய், முத்துமாலையினால் அலங்கரிக்கப்பட்டவராய், எல்லா லக்ஷணமும் பொருந்தியவராய் உள்ள விட்ணுவைத் தியானிக்க வேண்டும்.

ब्रह्माणं पश्चिमेकुण्डे मौञ्जीदर्भैरलंकृतम् ।
चतुर्भुजं चतुर्वक्त्रं प्रतिवक्त्रं त्रिलोचनम् ॥ 404

पीतवर्णं सुवदनं चित्रवस्त्र समन्वितम् ।
सर्वावयव संपूर्णं स्रुग्दण्डाक्ष कमण्डलुम् ॥ 405

மேற்கிலுள்ள குண்டத்தில் முஞ்சை என்ற தர்பத்தினால் அலங்கரிக்கப்பட்டவராயும் நான்கு கைகளையுடையவராயும் ஒவ்வொரு திருமுகந் தோறும் மும்மூன்று கண்களையுடையவராயும், மஞ்சள் வர்ணமுடைய திருமேனியுடையவராயும், மலர்ந்த முகமுடையவராயும் பல கலரையுடைய ஆடையணிந்தவராயும், குறைவற்ற அவயவமுடையவராயும், ஸ்ருக், தண்டம் அக்ஷமாலை

கமண்டலு என்ற இவைகளைக் கைகளில் தரித்தவராயும் இருக்கிற பிரமதேவனைத் தியானிக்கவேண்டும்.

एवं मूर्तीश्वराः प्रोक्ताः मंत्रं चैवाधुनोच्यते ।
पूर्वेपुरुष हृत्प्रोक्तं याम्ये घोर शिरस्तथा ॥ 406

प्राशौ सद्यं च कवचं सौम्ये वामशिखे स्मृताः ।
नेत्रास्त्रेशान देवास्यु रच्यार्ः प्राधान्य कुण्डके ॥ 407

இவ்வாறு மூர்த்தீச்வரர்கள் கூறப்பட்டார்கள். இனி அக் குண்டங்களில் பூஜிக்கப்படும் மந்திரங்கள் என்ன என்று கூறப் படுகிறது. அதாவது ஒவ்வொரு குண்டத்திலும் இரண்டிரண்டு மந்திரங்கள் பூஜிக்கப்படவேண்டும். மந்திரங்கள் என்பது இங்கு சம்ஹிதா மந்திரமாகும். அந்த மந்திரங்கள் பதினொன்று. அதில் கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்ற திக்குகளிலுள்ள குண்டங்களில் இரண்டிரண்டாய் எட்டு மந்திரங்களையும் பூஜித்து பிரதான குண்டத்தில் மூன்று மந்திரங்களையும் பூஜிக்க வேண்டும். அம்முறையாவது கிழக்கிலுள்ள குண்டத்தில் தத் புருஷம் என்ற மந்திரத்துடன் ஹ்ருதயம் என்ற மந்திரத்தைப் பூஜிக்கவேண்டும். இதுபோல் தெற்கிலுள்ள குண்டத்தில் அகோரம் என்ற மந்திரத்துடன் சிரோ மந்திரத்தையும், வடக்கி லுள்ள குண்டத்தில் வாமதேவம் என்ற மந்திரத்துடன் சிகா மந்திரத்தையும், மேற்கிலுள்ள குண்டத்தில் சத்யோஜாதம் என்ற மந்திரத்துடன் கவச மந்திரத்தையும் ஈசான திக்கிலுள்ள ப்ரதான குண்டத்தில், ஈசானம் நேத்திரம் அஸ்திரம் என்ற மந்திரங்களையும் பூஜிக்கவேண்டும்.

पूर्वादिकुण्डे द्वौ देवान् वर्ण ध्यानं च पूर्ववत् ।
तत्तत्कुण्डे समावाह्य तत्तन्मंत्रेण होमयेत् ॥ 408

இவ்வாறு கிழக்கு முதலிய குண்டங்களில் இரண்டிரண்டு மந்திரங்கள் வீதம் 'பூஜித்து அப்படியே அந்தந்தக் குண்டங் களில் ஹோமமும் செய்யவேண்டும்.

[ தொடரும் ]

உ

சிவமயம்

# திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் ஸ்தோத்திரப் பாமாலை

ஸ்ரீமத். மீனாக்ஷிசுந்தர சுவாமிகள்

## கணபதி துதி

*ஆனை முகத்தாய் அரனைத்துதிக்க வருள்*
*ஏனை யிடர்தீர்ப்பா யெனக்கு.*

## முருகன் துதி

*மலைவள்ள னீதான் மனத்தி லிருக்க*
*தொலையுமே பாசத் தொடர்.*

*நீலமார் விடமே யுண்ட நித்தனே கருணைக் குன்றே*
*பாலன்றன் பாட ஞானப் பாலினைக் கொடுத்தே யாண்டாய்*
*காலனை யுதைத்த காலால் கடையனை யுதைத்தே யாள்வாய்*
*சூலமார் கையி னானே சோதியே போற்றி போற்றி.* 1

*கோலமார் சடையி னானே கூற்றினை யுதைத்த காலா*
*சீலந்தான் சிறிது மில்லேன் தீமையே புரிந்து வாழ்ந்தேன்*
*ஞாலமே புகழுங் காலால் நாயனை யுதைத்தல் செய்வாய்*
*தூலசூக் குமகாயத்தைத் தோய்ந்திடா தருளுஞ் செய்வாய்* 2

*அன்னையோ டப்பனான ஐயனே அரனே போற்றி*
*என்னைநீயாள வெண்ணில் இயம்புவன் ஒன்று கேண்மின்*
*நன்மையே சிறிதும் தேரா நாயினேன் பிறவா வண்ணம்*
*உன்னுடை பாதத்தாலே யுதைத்துமே யாளு வாயே* 3

*பிறப்பிறு டிறப்பு வேண்டேன் பெரியதோர் செல்வம் வேண்டேன்*
*மறப்பொடு நினைப்பு வேண்டேன் மாபெரும் புகழும் வேண்டேன்*
*சிறப்பொடு வாழ்வதற்குத் திருவடி ஞான மீவாய்*
*அறநெறி நின்ற காலன் அறிந்தகா லுதைத்தல் செய்வாய்* 4

நாயினே னுன்னைச் சேர நன்னெறி ஞானம் வேண்டும்
பேயினை யொத்தே வாழ்ந்தேன் பிறந்ததாற் பயனொன் றில்லை
வாயினாற் றுதித்தேனில்லை மாதவம் புரிந்தே னில்லேன்
சேயிவன் என்றே எண்ணித் திருவடி யுதைத்தல் செய்வாய் 5

தொண்டரோ டிருக்கச் செய்தாய் தூய்மையோ டிருந்தேனில்லேன்
கண்டவர் வெறுக்கச் செய்தாய் காலனை யுதைத்த காலா
அண்டங்கள் தோன்றச் செய்த அபிராமி யோர்பா கத்தில்
கொண்டனை யுன்றன் காலால் கொடியனை யுதைத்தேயாள்வாய் 6

காமத்தா லறிவு கெட்ட கடையனான் எவ்வா றுய்வேன்
ஈமக்கா டதனி லாடும் இறைவநீ மனத்தி லுன்னி
நாமத்தைக் கடந்தா யுன்றன் நல்லடி யுதைத்தல் செய்வாய்
வாமத்தில் சத்தி தன்னை வைத்தவா குறைவு முண்டோ 7

கடையூரிற் றோன்றி நீதான் காலனை யுதைத்தா யென்றே
அடைவாகக் கேட்டு நாயேன் ஆசையா லுன்கண் வந்தேன்
தொடையெலாம் தாங்கு மீசா சொற்பதம் கடந்த நீதான்
மடையனை யுதைப்பாய் காலால் மன்னிய பாசம் போமே 8

இங்கு நான் மறந்தா லுன்னை எமன்வசம் ஆகு வேனே
பொங்கிய வருளா லென்னைப் பொற்பதம் சேர்த்துக் கொள்வாய்
பங்கமே யில்லா ஞானப் பரமனே மறந்தி டாமல்
செங்கைவேல் முருகற் பெற்றாய் சிறியனை யுதைத்தல் செய்யே 9

கருணையே மேனி கொண்டாய் கங்கையைச் சடைக்கண் கொண்டாய்
உருவமே யொன்று மில்லாய் ஓங்கிய ஞான ரூபி
பெருமைதான் சிறிதும் வேண்டேன் பிரமனும் மாலுங் காணாய்
கருமைசேர் மலத்தை நீக்கிக் கழலடி சேர்த்துக் கொள்ளே. 10

அருவமோ டுருவங் கொண்டாய் அமுதமே லிங்க மானாய்
திருக்கடை யூர்வா ழீச திருநிறை கைலை கண்ட
தருமைசேர் சுப்ர மண்ய சற்குரு மூர்த்தி வாழ்க
பெருமைசே ரடியார் வாழ்க பிறப்பிலாய் வாழ்க நன்றே.

# செய்திகள்

தருமையாதீனத்தில் :

## ஆவணிமூலத் திருநாள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் ஆவணி மூலத்திருநாள் 18—8—64 செவ்வாய்க்கிழமை மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. ஆவணிமூலத் திருநாளையொட்டி ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் புரிந்து வழிபட்டார்கள். பெருமக்கள் பலர் வந்து வழி பாட்டில் கலந்து கொண்டனர். வழிபாட்டிற்கு வந்திருந்தோரனை வர்க்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் விபூதிப் பிரசாதம் முதலியன வழங்கியருளினார்கள். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை சைவ இலக்கியப் பேரறிஞர் டாக்டர், திரு. மா. இராசமாணிக்கனார் M. A., Phd. அவர்கள் எழுதிய 'சைவசமய வளர்ச்சி' என்ற நூல் விழா மலராக வெளியிடப்பட்டது. பின்னர் அன்று நண்பகல் மாகேஸ்வர பூஜை சிறப்புற நிகழ்ந்தது.

## ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டுவிழா

ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா 16, 17, 18—8—64 ஆகிய மூன்று நாட்களிலும் தருமையாதீனத் திருநெறியதெய்வத் தமிழ் மன்றத்தில் நிகழ்ந்தது. இவ்வாண்டு தோத்திர, சாத்திர, பண்டாரசாத்திரத் திருநாள்களாக ஆவணிமூல விழாவை யொட்டிக் கொண்டாடப்பெற்றன.

16—8—64 ஞாயிற்றுக்கிழமையன்று தோத்திரத்திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. அன்று ஆதீன வேதசிவாகம பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது. மாலை 6-மணிக்குச் சொற்பொழிவுகள் தொடங்கி நடைபெற்றன.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர். வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் "திருமுறையில் அருட்செயல்" என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை, வித்துவான், திருமதி. ப. நீலா "திருமுறையில் - இலக்கியச்சுவை" என்ற தலைப்பிலும் சொற் பொழிவாற்றினர். தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

17--8--64 திங்கட்கிழமையன்று சாத்திரத் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. அன்று ஆதீனத் தேவாரப் பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி ஆண்டு விழா நிகழ்ந்தது. மாலை 6-மணிக்குச் சொற்பொழிவுகள் தொடங்கி நடைபெற்றன.


மாயூரம், குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமண்ணியசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் "சந்தான குரவர்" என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி, வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "சுத்தாத்துவிதம்" என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம்மல், வித்துவான், திரு. சா. குருசாமி தேசிகர் "சித்தி நெறி" என்ற தலைப்பிலும் சொற் பொழிவாற்றினர். தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி மாணவ மாணவியர்களால் ஓரங்க நாடகம் சிறந்த முறையில் நடிக்கப்பெற்றது.

18—8—64 செவ்வாய்க்கிழமை பண்டாரசாத்திரத் திருநாளாகக் கொண்டாடப்பட்டது. அன்று, ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் ஆண்டு விழா சிறப்புற நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீனக் கல்விநிலைய மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி ஆசியருளினார்கள்.

## பட்டமளிப்பு விழா


தருமையாதீனம் 25 ஆவது குருமாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், சென்னை "திருக்கோயில்" ஆசிரியர், புலவர், திரு. N. R. முருகவேள் M.A., M.O.L., அவர்களுக்குச் "சித்தாந்தப் புலவர்மணி" என்ற பட்டம் வழங்கி ஆசியருளினார்கள்.

தருமையாதீனம் ஆவணிமூல விழாவில்




ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
N. R. முருகவேள் M. A., M. O. L. அவர்களுக்கு
"சித்தாந்தப்புலவர்மணி" என்ற பட்டம் வழங்கி
பொன்னாடை போர்த்தி ஆசி அருளல்.

தருமையாதீனம் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமிதேவஸ்தானத்தில்



சென்னை மாநில தொழில் அமைச்சர்,
கனம், திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கட்குப் பிரசாதம் வழங்குதல்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்:



அமைச்சர் கனம், திரு. வெங்கட்டராமன் அவர்கள்.

நெல்லையில்



தருமையாதீனம் 6-வது மகாசந்நிதானம்
குருமூர்த்த ஆலய கும்பாபிஷேகக் காட்சி

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறை, சைவ இலக்கியப் பேரறிஞர், டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A., Phd. அவர்கள் சிறப்புப் பட்டம் பெற்ற திரு. N. R. முருகவேள் M. A., M. O. L., அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். பின்னர் "சிந்தாந்தப் புலவர்மணி" புலவர் திரு. N. R. முருகவேள் M. A., M. O. L. அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ந்தது. (ஆசியுரை, பேச்சுக்கள் முதலியன முன்னே தரப்பட்டுள்ளன).

வைத்தீஸ்வரன்கோயில் தேவஸ்தானம், கட்டளை விசாரணை, வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் நன்றியுரை கூறினார்கள்.

## ஸ்ரீ துர்க்காம்பிகைக்குப் புஷ்பாஞ்சலி

குரோதி ஆண்டு ஆடித்திங்கள் 30-ஆம் நாள் (14—8—64) வெள்ளிக்கிழமை திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயத்தில் ஸ்ரீ துர்க்காதேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அர்ச்சனையும் நடைபெற்றன. இரவு 8 மணிக்குப் புஷ்பாஞ்சலியும் நிகழ்ந்தது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டு அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வைக்கப்பெற்ற துணிப் பைகளை வழங்கினார்கள் பெருமக்கள் பலர் வந்து வழிபட்டுய்ந்தனர்.

## தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி

## மாணவர் கழகத் தொடக்க விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியால் பல்கலைக்கல்லூரி ஸ்ரீ குருஞான சம்பந்தர் மாணவக் கழகத் தொடக்க விழா 13—8—64 வியாழக்கிழமை மாலை மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. மாணவர்கள் வண்ணக் காகிதங்களாலும் தோரணங்களாலும் அலங்கரித்திருந்தனர். மாலை 4 மணிக்கு விழா தொடங்கப் பெற்றது.

கடவுள் வாழ்த்துப்பாடியபின்னர் கல்லூரி முதல்வர் வித்துவான், திரு. சா. குருசாமி தேசிகர் வரவேற்பு கூறினர். கழகச் செயலர் கலியமூர்த்தி அறிக்கை படித்தார். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் பண்டித வித்துவான். திரு. சுந்திரமூர்த்தி அவர்கள் "கவிநயம்" என்ற தலைப்பில் குறள், வாழ்க்கையில் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதை நயம்பட உரைத்தார். கம்பராமாயணம் சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் கவிதைச் சுவைகளை எடுத்துக் காட்டினர்.

மாயூரம் திரு. B. திருஞானம் பிள்ளை B. A., B.L.. அவர்கள் நெல்லைத் தமிழ்ச்சங்கத் தேர்வு. மதுரை தியாகராசர் கல்லூரி கட்டுரைப் போட்டி, நெல்லை மறைமலையடிகள் கட்டுரைப் போட்டி சுதேசமித்திரன் மாணவர் பரிசுத்திட்டம் ஆகியவற்றில் பரிசுகள் பெற்ற மாணவர்கள் இரா. செல்வக்கணபதி, K. செல்லப்பா கவுண்டர், இரா. சந்திரசேகரன் ஆகிய மாணவர்களைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினர். கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் ஆசிரியர்கள் சார்பில் அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார் கழகச் செயலாளர் கலியமூர்த்தி நன்றி கூற நாட்டுவாழ்த்துடன் தொடக்கவிழா சிறப்பாக நடைபெற்றது. மாயூரம் நகரப் பெருமக்கள் பலரும் கலந்து கொண்டு மகிழ்வுற்றனர்

## சுதந்திரதின விழா

தருமையாதீனத் தமிழ்க்கல்லூரியில் தாய்நாட்டின் 18வது சுதந்திர தினவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாயூரம் உயர்திரு, சேஷகிரி ஐயர் அவர்கள் தலைமையேற்று தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. சா. குருசாமி தேசிகர் அவர்கள் அனைவரையும் வரவேற்க மாணவர்கள் அனைவரும் ஒருங்குகூடி தேசியக் கொடிக்கு வணக்கம்தெரிவித்தனர். திரு. சேஷகிரிஐயர் அவர்கள் சுதந்திரநாட்டில் மாணவர்கள் கடமையை விளங்கக் கூறினர். கல்லூரிப் பேராசிரியர் சிரோமணி வித்துவான். திரு, வி. சபேசன் அவர்கள் அனைவர்க்கும் நன்றி நவில நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது. இறுதியில் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணியவர்களின் அன்பளிப்பான இனிப்புப் பொட்டலங்கள் அனைவர்க்கும் வழங்கப்பட்டன.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி

## இலக்கிய மன்றத் தொடக்க விழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருளாசியால் விளங்கிவரும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளியின் இலக்கியமன்றத் தொடக்கவிழா 25—8—64 செவ்வாயன்று மாலை 4 மணியளவில் மிகச்சிறப்புற நடைபெற்றது.

மாணவிகள் இறைவணக்கம் பாடியபின் தலைமையாசிரியர் திரு. R. V. கணேசன், B. A., L. T., அவர்கள் வரவேற்புரை கூறினார்கள்.

மாயூரம் மாவட்டக் கல்வி அதிகாரி திரு. V. K. கனகராஜ் B. A., L. T., அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று இலக்கிய மன்றத்தின் இன்றியமையாமை குறித்தும் கல்வி கற்பதின் நோக்கம் பற்றியும் கனிவான அறிவுரை வழங்கினார்கள். பின்னர் மாயூரம் அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. கலியபெருமாள் M. A. அவர்கள் நாநலத்தின் சிறப்பைக் குறித்துப் பல பெரியோர்களின் வரலாற்றுச் சான்றுகளைக் கூறிச் சிறப்புரை வழங்கினார்கள்.

பள்ளிமாணவிகளால் சிறப்பான கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பட்டன. தலைவரவர்கள் முடிவுரை மொழிந்தபின் தமிழாசிரியர் வித்துவான். திரு. ச. பாலன் அவர்கள் அனைவர்க்கும் நன்றியுரை நவின்றார்கள். மாணவர்களின் சார்பில் சி. செயபால் நன்றி நவில, மாணவிகள் நாட்டு வாழ்த்துப் பாட விழா இனிது நிறை வுற்றது.

சீர்காழியில் :

## ஸ்ரீ திருஞானசம்பந்தர் அபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிக்குக் குரோதி ஆண்டு ஆவணித் திங்கள் 8-ஆம் நாள் (23—8—64) ஞாயிற்றுக்கிழமையன்று காலையில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன.

மாலை 5 மணி முதல் திருமுறைப்பாராயணமும் சமயச் சொற்பொழிவும், இரவு சுவாமி புறப்பாடும் நடைபெற்றன. அவ்வமயம் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கோயில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், சிரோமணி திரு. வி. சபேசன் அவர்கள் "திருநெறியதமிழ்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

## திருஞானசம்பந்தர்

திருமுறை இன்னிசைவாணர். வேளூர், க. சோக்கலிங்கம்.

இராகம்: அம்ஸாநந்தி. ] [ தாளம்: ஆதி.

பல்லவி

சம்பந்தன் இந்த தரணிவரச்செந்
தமிழ்தவம் செய்த தம்மா - திருஞான (சம்)

அனுபல்லவி

செம்பொன் மணிமாடத் திருக்கழுமலத்தில்
தென்னுடு புகழ்பெற என்னுடும் இன்புறச் (சம்)

சரணம்

அரன் அருள்திறம் விளங்க அமணர் வலிதொலைய
அயல்மொழித் துறை அனைத்தும் அடங்கத் தமிழ்மொழியின்
தரமோங்கத் தவமோங்கச் சராசரம் தழைத்தோங்கத்
தங்கும் சிவமணமே எங்கும் கமழ்ந்திலங்கச் (சம்)

# சாரதா நவராத்திரி

சிவாகம வித்துவான்

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்.

சுரும்பு முரல் கடிமலர்ப்பூங்குழல் போற்றி
உத்தரியத்தொடித்தோள் போற்றி
கரும்புருவச்சிலை போற்றிக் கவுணியற்குப்
பால் சுரந்த கலசம் போற்றி

இரும்புமனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிளநகை போற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி.

(திருவிளையாடற்புராணம்)

*நவராத்திரி என்பது ஒன்பது நாள்களில் தேவியை உபாசிக்கும் விருதம். இது வசந்த நவராத்திரி என்றும் சாரதா நவராத்திரி என்றும் இரண்டு. நவராத்திரி ஆராதனம் பிரசித்த மாகக் கொள்ளப்படுகிறது. வசந்த நவராத்திரி என்பது சாந்தி ரமானரீதியாக சைத்ர சுக்லப்ரதமை முதல் சுக்ல நவமி வரையில் அனுஷ்டிக்கப்படும் தேவி பூஜை. இதுபோல் சாரதா நவராத்தி ரியானது சரத்காலத்து சாந்திரமான ஆச்வின சுக்லப்ரதமை தொடங்கி சுக்லபக்ஷ நவமி முடிய அனுஷ்டிக்கப்படும் தேவி விருதம்.*

**मासि चाश्वयुजे शुक्ले नवरात्रे विशेषतः ।
संपूज्य नवदुर्गां च नक्तं कुर्यात्समाहितः ।
नवरात्राभिधं कर्म नक्तव्रतमिदं स्मृतम् ॥**

**—ஸ்காந்தம்.**

**உபாசிக்கும் காலம் :**

***நவராத்திரிகளில் தேவியை இரவில் விசேஷமாகப் பூஜிக்க வேண்டும். தேவியின் பூஜை இரவிலேயே சிறந்தது.***

अर्थः शंभुः शिवावाणी दिवा शंभुः शिवा निशा ॥

அதாவது சிவன், பொருள், தேவிவாக். இதுபோல், பகல் சிவன், இரவு தேவி, என்று ஸ்காந்தபுரணம் கூறுகிறது. ஆதலால் இரவிற்கு அதி தேவதையான தேவியை இரவிலேயே பூஜிக்க வேண்டும்.

இந்த ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் இறைவனின் மூன்று சக்திகளுள் இச்சை என்னும் சக்தியின் தோற்றக் காலமாதலால் அப்போது துர்க்கை பூஜிக்கப்படுகிருள். நடுவிலுள்ள மூன்று நாள் ஞானசக்தியின் தோற்றமான லக்ஷ்மி துர்க்கை பூஜிக்கப்படுகிருள். இறுதி மூன்று நாள் கிரியா சக்தியின் தோற்றமான சரஸ்வதி துர்க்கை பூஜிக்கப்படுகிருள். ஆகவே இவ்வொன்பது நாட்களிலும் முறையே துர்க்கை லக்ஷ்மி, சரஸ்வதி என்ற மூன்று சத்திகளும் பூஜிக்கப்படுகிருர்கள்.

பூஜை முறை :— நவராத்திரிக்கு வேண்டிய பூஜோபகரணங்களை அமாவாசையன்றே சேகரித்துக்கொண்டு அன்று ஒரு வேளை உணவு உண்டு மறுதினம் பிரதமைதிதியில் பூஜாரம்பம் செய்யவேண்டும். தானே செய்யமுடியாதவர்கள் தகுதியுள்ள ஒருவரை வரணம் செய்து பூஜிக்கச் செய்து அந்தப்பலனைப் பெறவேண்டும். அவ்வாறு வரணம் செய்யப்பட்ட ஆசாரியனைக் கொண்டு முறைப்படி கடஸ்தாபனம் செய்வித்து அந்தக் குடும்பத்தில் நவதுர்க்காஸ்வரூபிணியாயும், சர்வசக்தி சுவரூபிணியாயும் விளங்கும் தேவியை ஆவாகனம் செய்வித்து நவாவரண பூஜை முதலியவைகளை சாங்கோபாங்கமாகப் பூஜித்து சுகந்தமான அர்க்கியம் கொடுத்து இளநீர், மாதுளை, வாழைப்பழம், பலா, மாங்கனி முதலிய பக்வமான நல்லகனிகளையும் ருசியான அன்னம் பக்ஷயம் முதலியவைகளுடன் ஏலம், லவங்கம், ஜாதி பலம் முதலியவைகளுடன் கூடிய தாம்பூலத்தையும் நிவேதனம் செய்து, துதித்து அனேகவித நிருத்தகீத வாத்தியங்களால் தேவியை திருப்தி செய்விக்கவேண்டும். தினம்தினம் ஹோமம் செய்வது உத்தமோத்தமம்.

இவ்வாறு ஒன்பதுநாள் விருதமிருந்து விரதபங்கமற்ற ஆகாரம் புசித்து சயனாதிகளை விலக்கி நிலமிசைப் படுத்தல் வேண்டும்.

ஆரம்பமான பிரதமையுடன் அஸ்த நக்ஷத்திரம் கூடுமாயின் அதுவிசேஷ தினமாகும். அத்தினத்தில் பூஜையில் அம்பிகை விசேஷமாக சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கிருள். இதுபோல்

அஷ்டமியிலும், நவமியிலும் செய்யப்படும் விசேஷ பூஜையினும் தேவி துக்கமின்மையை அளிக்கிருள்.

மற்றும் நவராத்திரிகளில் தினம்தினம் விருத்தி முறையால் பூசித்தால் அவர்கள் நோயற்றவர்களாய் எண்ணிறந்த போக போக்யங்களை அனுபவித்து தேவர்களுக்கும் கிட்டாத இன்பத்தை அனுபவிக்கிருர்கள் என்று ஸ்காந்தபுராணம் கூறுகிறது. விருத்தி பூஜை என்பது, தினம் ஒவ்வொரு பூஜை அதிகமாகப் பூஜித்து நவமியன்று ஒன்பது பூஜை செய்யவேண்டும். இவ்வாறு விருத்தி யாக ஜபம் ஹோமம் செய்யவேண்டும். இம்முறை தேவிக்கு மிகவும் திருப்தியளிக்கும் பூஜையாகும். மற்றும் தினம் சுவாசினீ பூஜை முக்கியமாகும். நவராத்திரிபூஜையின் முடிவில் ஒவ்வொரு நாளிலும், நோயற்ற லக்ஷணம் பொருந்திய யௌவனப்பருவ முள்ள வனிதாமணியை தேவியாகத் தியானித்து சுகந்த சந்தன புஷ்பங்களாலும் ஆடை ஆபரணங்களாலும் அலங்கரித்துப் பூஜித்து உபசரித்து அறுசுவையோடு பக்ஷ்ய பரமான்னத்துடன் உணவளித்து தக்ஷிணை தாம்பூலம் கொடுத்தல் வேண்டும். இது பிரத்தியக்ஷமாக தேவியே நேரில் ஏற்றுக்கொள்வது போன்றதாகும். இதனுடைய பலன் மிக உயர்ந்தது.

सुरूपा तरुणी शान्ताऽनुकूला मुदिता शुचिः ।
शङ्काहीना भक्तियुक्ता गुरुशास्त्र परायणा ॥

—குலார்ணவம்.

நல்ல அழகுடையவளாய், தருணியாய், சாந்த சுவாபமுடைய வளாய், அனுகூலமுடையவளாய், சந்தோஷமுடையவளாய், சங்கையற்றவளாய், பக்தியுடன் கூடியவாளான சுவாசினியைப் பூஜிக்கவேண்டும் என்று குலார்ணவம் என்ற நூல் கூறுகிறது. "ஸுவாஸின்யர்ச்சனப்ரீதா" என்று லலிதாசஹஸ்ரநாமத்தில் ஒரு அருச்சனையைக் காணலாம்.

இதுபோல் நவராத்திரியின் ஒன்பது நாட்களில் சதசண்டி, சஹஸ்ரசண்டி ஹோமம் செய்பவர்கள் குமாரி வடு பூஜைகளையும் செய்யவேண்டும். விபவத்தைக் குறித்து சுவாசினிகுமாரி பூஜைகளை விருத்திக்ரமத்திலும் செய்யலாம். இவ்வாறு செய்யா விடில் குறைவில்லை விசேஷபலன் உண்டாகும்.

தேவியின் திருவிளையாடலில் சில முக்கியமானவைகள் :

மதுகைடபன் மஹிஷாசுரன், தூம்ரலோசனன், சண்டன், முண்டன், ரக்தபீஜன், நிசும்பன், சும்பன் முதலிய அரக்கர்களை

அழித்து தேவர்களையும், சாதுக்களையும் அவ்வப்போது பல வடிவங்களாகத் தோன்றி காப்பாற்றினுள். அத்தகைய வடிவங்களின் முக்கியமானது மகாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி மற்றும் சாமுண்டி, பிராம்மி, மாகேச்வரி, கௌமாரி, வைஷ்ணவீ, வாராஹி முதலிய வடிவங்கள். இவைகளை தியானித்துத் துதிக்க வேண்டும்.

मातर्मे मधुकैटभघ्नि महिषप्राणापहारोद्यमे
हेलानिर्मित धूम्रलोचन वधे हे चण्डमुण्डार्दिनी ।
निश्शेषीकृत रक्तबीजदनुजे नित्ये निशुंभापहे
शुंभध्वंसिनि संहराशु दुरितं दुर्गे नमस्तेम्बिके ॥

இவ்வாறு துதித்தால் துதித்தவுடன் துதிப்பவர்களுடைய கஷ்டத்தை நீக்கிவிடுவாள்.

நவராத்திரி விரதத்தை எண்ணிறந்த தேவர்கள் அனுஷ்டித்து இஷ்டசித்திகளை அடைந்துள்ளார்கள்.

சுரதன் என்ற அரசனும், சமாதி என்ற வைச்யனும் தேவியை உபாசித்து இஷ்டசித்தியைப் பெற்றுர்கள்.

நவராத்திரி ஆராதன பலன் :

பூஜையினுல் விஸ்தாரமான ராஜ்யத்தையும் ஹோமத்தினுல், ஐச்வர்யத்தையும். ஜபத்தினுல் பாபநீக்கத்தையும் அடைகிறுன். மற்றும் குங்குமார்ச்சனையினுல் ரோகம், அரிஷ்டம் இவைகளின் விடுதலையையும், தேங்காயினுல் ஜெயத்தையும், தாம்பூலத்தினுல் காந்தியையும், பழத்தினுல் இஷ்டசித்தியையும், கற்பூர தரிசனத்தினுல் தான் ஜ்யோதிர் வடிவையடைந்து சுடர்போன்ற புத்ர பௌத்ரர்களையும் பெறுகிறுன் என்று சிவாகமமும் பிரும்மாண்ட புராணமும் கூறுகிறது.

தனம்தரும் கல்விதரு மொருநாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வவடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந்தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாளபிராமி கடைக்கண்களே.

—அபிராமி பட்டர்.

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

(குரோதிஸு புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய)

(17—9—64 முதல் 16—10—64 முடிய)

## 1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

*மேஷராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத்தரும். குடும்பிகளுக்கு மத்தியில் சிற்சில கவலைகளை உண்டுபண்ணும். சொல்ப நஷ்டங்களும் அதிக விரயமும் ஏற்படச்செய்யும். ஆரோக்யம் உண்டுபண்ணும். தொழில் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.*

## 2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

*ரிஷபராசி 9 பாதங்களும் மகத்தான கௌரவங்களையும், தெய்வ சக்தியையும் ஓங்கச்செய்யும். சகல காரியங்களும் வெற்றி அடையும். உலகப் பிரசித்தி ஏற்படும். ஆரோக்கியம் உண்டாகும். நல்லோர் பெரியோர்களால் நன்மை கிடைக்கும். புதன், சனி சுபமாகும்.*

## 3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

*மிதுனராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத்தந்து இல்லற சுகத்தைப் பூர்ணமாய்க்கொடுத்து சகல வித்தியாவிருத்தியையும் உத்தியோக உயர்வையும் தரும். மத்தியில் சொல்ப ரோக பீடைகளையும் அதிக செலவினங்களையும் காட்டும். திங்கள், புதன் சுபமாகும்.*

## 4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

*கடகராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத்தரும். கிருஷி வாணிஜ்யம் இரண்டிலும் சிரமத்தை உண்டுபண்ணும்*

சகல காரியங்களும் தடங்கல்படும். ஆனாலும் பூர்த்தி காலத்தில் தன்னிஷ்டப்படியேயெல்லாம் சந்தோஷத்தை உண்டுபண்ணும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உத்திரம் முதல்பாதமும் சுபத்தைத்தரும் தனதான்ய விருத்தியும் ஜீவன லாபமும் மங்கள காரியங்களும் உண்டுபண்ணும். பூரம் நான்கு பாதங்களும் மிச்ர பலனைத்தரும். சுக துக்கம் சமமாகும். அதிக விரயங்களும் காரியங்களில் தாமதமும் காட்டும். ஆயினும் தெய்வபலம் காக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் ஹஸ்தம் 1, 2 பாதமும், மிச்ர பலனைத்தரும். அதிக அலைச்சலும், காரிய தாமதமும், அதிக விரயங்களும் காட்டும். ஹஸ்தம் மூன்று நான்கு பாதங்களும் சித்திரை 1, 2 பாதமும் விசேஷ சுகபோகங்களைத்தரும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் தானாக வந்து சேரும். உலகப் பிரசித்தியையும் உண்டு பண்ணும். ஆனாலும் மத்திய காலங்களில் சிற்சில மனக்கவலைகளையும் தரும். ஆனாலும் கன்னியா ராசி 9 பாதங்களும், உத்தியோக சம்பந்தமாகவோ குடும்ப சம்பந்தமாகவோ சிரமத்தைத்தராது. சுபம் உண்டுபண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

## 7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலா ராசி 9 பாதங்களும் நன்மை உண்டுபண்ணும். எதிர் பாராத பெரிய காரியங்களைச் சாதித்துத்தரும். நஷ்ட தானியங்களும் ஸ்தாவர சங்கம சொத்துக்களும் தானாக வந்து சேரும். தெய்வ சக்தி ஓங்கும். அசாத்யமெல்லாம் சுலப சாத்யமாகும். உத்தியோக உயர்வால் இடம்மாறச்செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விசாகம் நான்காம்பாதம், பூர்ண சுபம் இராது. அதிகத் தொல்லைகளைப் பலவிதத்திலும் உண்டுபண்ணும். அனுஷம்

நான்கு பாதங்களும் கேட்டை நான்கு பாதங்களும், மிச்ர பலனைத்தரும். சுபம் ஒரு பங்கும் அசுபம் மூன்று பங்குமாக இருக்கும். தெய்வபலம் குறையும். ஆனாலும் கடைசியில் எல்லாம் வெற்றி அடையும். நல்லோர் பெரியோர்கள் அன்பு கிட்டும். அதிக செலவினங்களின் பேரில் ஐயம் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனூர்ராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத் தந்து சகல கவலைகளையும் நீங்கச்செய்யும். தெய்வபலம் முன்னிற்கும், இல்லறசுகம் ஓங்கும். நஷ்ட தனங்கள் வந்து சேரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் பூர்ண சுபத்தைத்தரும். விசேஷமான தான தர்ம பலன்கள் கிடைக்கச்செய்யும். ஜீவனலாபம் ஓங்கும். எதிர்பாராத பெரியோர்களின் அன்பு கிடைக்கும். கிரஹ சுகபோகம் விருத்தியாகும். ஆரோக்கியம் உண்டு பண்ணும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி - ¾.

அவிட்டம் 3, 4 பாதங்களும் சதயம் நான்கு பாதங்களும் விசேஷ சுகத்தைத்தரும். நினைத்த காரியமெல்லாம் உடனே ஜயிக்கும். தெய்வபலம் ஓங்கும். சத்ருக்கள் உபாதை நீங்கும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் மிச்ர பலனைத்தரும். குடும்ப சுகம் ஓங்கும். ஆரோக்யக்குறைவு காட்டும். தொழில் ஓங்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமேயாகும். பலவிதத்திலும் ஜீவன லாபம் ஓங்கச்செய்யும். இல்லறசுகம் ஓங்கும். பெரியோர்களுடைய அன்பு கிடைக்கச்செய்யும். சகல காரியங்களும் வெற்றி அடையும். ஆரோக்கியமும் சுகமும் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி புரட்டாசி மாதத்தில் தக்ஷிண பாரதத்தில் சஸ்ய விருத்தியும் தான்ய விருத்தியும் ஏற்படும். அடிக்கடி கண்டவிடமாக மழையும் உண்டாகும். சுபிக்ஷகர மான தோற்றம் ஏற்படும். அருளும் மகாஜனங்களுக்கு சுகம் பூர்ணமாகத் தராது. ஈதிபாதைகள் அதிகமாகும். உலகில் சாந்தி குறையும். எங்கும் கிளர்ச்சிகளும் கலகங்களும் அதிக மாகும். சாதுக்கள் சிரமப்படுவார்கள். கிருஷி வாணிஜ்யம் இரண்டிலும் பலவிதமான இடைஞ்சல்கள் உண்டாகும். எல்லாம் இறைவன் அருளால்தான் நீங்கிப் பூர்ண சுபத்தைத் தரவேண்டும். மகாஜனங்கள் அவரவர்கள் கடமைகளை சிரத்தா பக்தியோடு தெய்வத்தைப் பூர்ணமாய் நம்பியும், நடந்து கொண்டு வந்தால் சகல துக்கங்களும் தானாக விலகும். விந்தி யோத்தர தேசத்தாலும் தீவிபாந்தர தேசத்தாலும் உலகத் தினருக்கு அநேக பயங்கரமான உத்பாதங்கள் ஏற்பத்தி பல தேசங்களில் இல்லறம் நடத்த முடியாமல் மகாசனங்கள் சிரமத்தை அடைவார்கள். எல்லாம் இறைவன் அருளால்தான் நிற்கவேண்டும். கடவுள் காப்பாராக.

சுபம்

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

My family and I had Dharsan here. I must complement the mutt authorities and the temple servants for the extreme neatness and preservation of sanctity of the temple. The atmosphere is really one congenial for worship and meditation. The rituals are performed in accordance with precepts. It was realy an experience.

(Sd.) Sundaresam Pillai,
Sub-Judge,
Nagapattinam.

17—8—64.